# புதுவிதி
## PUTHU VITHI


விலை 20/=

பக்கங்கள் 24

26 ஜனவரி 2019

புதுமை : 03 விதி : 138

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'





இது எறும்புகளின் போர்க்களம்



காணாமல்போனவர்கள் இனி வரவேண்டாம்



கடன் அட்டை மூலம் பணம் எடுக்கலாமா?



தேடும் கண்கள்

# தேடும் கண்கள்



**சிறுத்தை** வைல்ட் ஸ்ரீலங்கா

இடம் : வில்பத்து சரணாலயம் படம் : சுமித் பண்டார



**செம்பருந்து**

இடம் : அல்லைப்பிட்டி படம்: தமிழரசன்



## பச்சைப் பஞ்சுருட்டான்

*ஆங்கிலம் : Green Bee Eater*
*உயிரியல் பெயர் : Merops orientalis*
*நீளம் - 16 - 18 செ.மீ.*
*ஆயுள் - 16 வருடங்கள்*

பச்சைப் பஞ்சுருட்டான், பச்சை ஈ பிடிப்பான் என அழைக்கப்பட்டாலும் இதன் உடலில் நீலம், தங்க நிறம் எனப் பல வண்ணங்கள் உள்ளன. இரு பாலினங்களும் ஒரே தோற்றம் கொண்டவை. இவற்றின் வால்கள் 5 செ.மீ. நீளம் கொண்டவை. ஆபிரிக்கா, ஆசியக் கண்டங்களை தாயகமாகக் கொண்டவை. இமயமலையின் 5,000 - 6,000 அடிகள் உயரத்திலும் வசிக்கக்கூடியவை. வயல்வெளிகளில் அதிகமாகவும், மனித நடமாட்டம் உள்ள பகுதிகளில் குறைந்தளவிலும் வாழ்கின்றன.

பூச்சிகள், தேனீக்கள், குளவிகள், தும்பிகள், எறும்புகளை உணவாகக் கொள்கின்றன. மரக்கிளை, கம்பியின் மீது அமர்ந்து சூழலை அவதானித்தவாறு இருக்கும். பறந்துதிரியும் பூச்சிகளை பறந்தபடியே அலகில் பிடித்தபடி மீண்டும் தன்னிடத்தில் வந்து அமர்ந்து பூச்சிகளின் கடினமான ஓட்டை அகற்றிய பின் அவற்றை உண்ணும். தேனீக்களின் கொடுக்குகளையும் அகற்றிவிட்டே உண்ணும்.


பஞ்சுருட்டான்கள் மணல் குளியலை மிகவும் விரும்புகின்றன. பறந்தபடியே நீரில் தன் உடலின் கீழ்ப் பகுதியை நனைத்து குளிக்கவும் செய்கின்றன. இவை நூற்றுக்கணக்கில் ஒன்றாக இணைந்து இருக்கும். நகரப்பகுதிகளிலும் பஞ்சுருட்டான்களை காண முடியும். மணலில் பொந்துகளை உருவாக்கி 3- 5 முட்டைகளை இடும். குஞ்சுகள் பொரிக்க 14 நாட்கள் எடுக்கும். மனிதனின் நடவடிக்கையை அவதானித்து அதற்கேற்ப செயற்படும் திறன் பெற்றவை இந்தப் பறவைகள்.



**குளத்துக்கொக்கு / குருட்டுக் கொக்கு**


வைல்ட் ஸ்ரீலங்கா படம் : ஹரி சுதர்சன்

எமது சூழலில் இருந்து பல்லுயிர் தன்மை இன்று அருகிவிட்டது. நாம் காணும் உயிர்களை அடையாளம் காண் பதுகூட இன்று அரிதாகி விட்டது. இவ்வா றான நிலையில் உங்கள் சூழலில் காணும் உயிர்களின் புகைப்படங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய முகவரி : puthuvithi@gmail.com



**செங்குரங்கு**

இடம் : பொலன்நறுவை படம் : செ.ராஜேந்திரா




**இராக்கொக்கு / கருந்தொப்பி இராக் கொக்கு**

வைல்ட் ஸ்ரீலங்கா படம் : அன்ரன்

# புதுவிதி
PUTHU VITHI


இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 26 ஜனவரி 2019 | விதி : 138



## கண்துடைப்பாகும் காணி விடுவிப்பு கேப்பாபிலவில் தொடரும் போராட்டம்

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற போதை ஒழிப்பு வார ஆரம்ப நிகழ்வின்போது இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த காணிகளில் 1050 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டு இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. ஏற்கனவே ஜனாதிபதி டிசெம்பர் 31 இற்கு முன் தனியார் காணிகள் யாவும் விடுவிக்கப்படும் என வாக்குறுதியளித்த நிலையில் ஜனவரி 21 பெரும் பிரசாரத்துடன் இச்சம்பவம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், விழா இடம்பெற்ற இடத்திற்கு அண்மையிலுள்ள கேப்பாபிலவு காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் இம்மக்கள் மீண்டும் தங்கள் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். வருடக்கணக்கில் அந்த மக்கள் தங்கள் சொந்தக் காணிகளை விடுவிக்கும்படி கோரியும் அவை மக்களிடம் கையளிக்கப்படவில்லை. அப்படியானால் காணி விடுவிப்பின் அர்த்தம் என்ன எனப் பல தரப்பினரும் கேள்வி எழுப்புகின்றனர்.

**அன்று இராணுவத் தளபதியால் கையளிக்கப் பட்ட காணிகளில் 1010 ஏக்கர் காணிகள் 364 ஏக்கர் மட்டுமே மக்களின் சொந்தக் காணிகள். வவுனியா மாவட்டத்தில் 41 ஏக்கர் காணிகளில் 14 ஏக்கர் மட்டுமே பொதுமக்களின் காணிகள். அதாவது ஒரு கண்துடைப்பாக பொதுமக்களின் காணிகளில் சிறுபகுதியை விடுவித்துவிட்டு, அதேவேளையில் அரச காணிகளை விடுத்து அதனுடன் சேர்த்துக் கணக்குக் காட்டி காணி விடுவிப்பு இடம்பெறுவதாக ஒரு கண்துடைப்பு நாடகம் நடத்தப்படுகின்றது. ஆனால் பொதுமக்களின் குடியிருப்புகளோ பயன்தரும், விளைநிலங்களோ விடுவிக்கப்படாமல் ஏமாற்றங்களே தொடர்கின்றன.**

ஜனாதிபதியின் காணி விடுவிப்பு நாடகம் ஜெனிவாவில் அறிக்கை சமர்ப்பிக்க நடத்தப்படு கிறதே ஒழிய மக்களின் காணிகளை விடுவிக்க அல்ல என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**காயம் பட்டதாம் தலையில்**
**கட்டுப்போட்டானம் காலில்**


### ஞானசார தேரரை விடுவிக்கக் கோரிக்கை

## இந்து மதகுருவின் விடுதலைக்கு குரல்கொடுக்காத இந்து சம்மேளனம்

ஞானசார தேரரின் எழுச்சி மிக்க உரைகள் பௌத்த மக்களை மட்டுமின்றி இந்துக்களையும் மத மாற்றத்திலிருந்து தடுத்தது எனவும் எனவே, அவர் சுதந்திர தினத்தின் முன் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் என இலங்கை இந்து சம்மேளனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வலியுறுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் பிரம்மஸ்ரீ ரகுபதி சர்மா 300 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றார். அவரது வழக்கில் அவருக்காக வாதாட சட்டத்தரணிகள்கூட அனுமதிக்கப்படவில்லை. அவரது மனைவியார் 18 வருடங்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்பு குற்றவாளி அல்ல என விடுவிக்கப்பட்டுள்ளார். இந்து மதகுருவுக்கும், அவரின் மனைவிக்கும் இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக இலங்கை இந்து சம்மேளனம் குரல் கொடுக்கவில்லை. அதேவேளை ஜனாதிபதியிடம் கோரிக்கையும் முன்வைக்கவில்லை.

ஆனால், நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டமை, முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள், குடியிருப்புகள் எரியூட்டல், கொள்ளையிடல்கள் போன்ற வன்முறைகளின் பின்நின்று செயற்பட்டவர் ஞானசார தேரர். அவர் ஒரு தட்டிக் கேட்க ஆளில்லாத பௌத்த வீரநாயகனாக வலம்வந்தார். அதேவேளை அமைச்சர் றிசாட் பதியுதீனின் அமைச்சு அலுவலகத்துக்குள் புகுந்து குழப்பம் விளைவித்து விட்டு வீரநாயகனாக வலம் வந்ததைப் போன்ற எதிர்பார்ப்பில் அவர் நீதிமன்றத்தில் புகுந்தும் குழப்பம் விளைவித்தார்.



அதன் பலனாகத் தற்சமயம் சிறைத் தண்டனை அனுபவிக்கிறார். அவரின் மேன்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் அவரின் விடுதலைக்கு இந்து சம்மேளனம் களத்தில் இறங்கியுள்ளது.

ஒரு அப்பாவி இந்து மதகுருவுக்காகக் குரல் கொடுக்காத இந்து சம்மேளனம் வன்முறையாளர் ஒருவருக்காக வக்காளத்து வாங்குவது, இவர்கள் உண்மையான இந்து மதத்தவர்களா? என்ற கேள்வியை எழுப்புவதாகப் பலரும் தெரிவிக்கின்றனர். யாரோ ஒரு சிலரைத் திருப்தி செய்ய ஏவிவிடப்பட்ட ஒரு குழு இதுவாக இருக்கலாம் எனச் சில உண்மையான இந்து மத பக்தர்களால் கருதப்படுகின்றது.

**கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்**
**குடிக்கத்தான் கற்பித்தானோ?**
**காலைத்தான் கழுவித்தான் நக்கத்தான்**
**குடிக்கத்தான் பிறப்பித்தானோ?**

## மத்தியின் அதிகாரத்துக்கு சவால் விட்ட மாநகர சபை

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் தனியார் கேபிள் தொலைக்காட்சி நிறுவனமொன்று மாநகர சபையின் அனுமதியின்றி கேபிள் இணைப்புக்கான கம்பங்களை நட்டது. உடனடியாகவே மாநகர சபை அதில் தலையிட்டு கம்பங்களை அகற்றிவிட்டது. இவ்விடயம் தொடர்பாக அந்நிறுவனம் தாம் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள வீதி அதிகார சபையிடம் அனுமதி பெற்றே கம்பங்களை நட்டதாகவும் அதை அகற்ற மாநகர சபைக்கு உரிமையில்லை என முறைப்பாடு செய்தது.

இவ்விடயம் நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி ஒரு மாநகர சபைக்குள் மேற்கொள்ளும் எந்த ஒரு நிர்மாணப் பணியும் மாநகர சபையின் அனுமதியின்றிச் செய்ய முடியாதெனத் தீர்ப்பு வழங்கி வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்.

மாநகர சபையின் அதிகாரங்களை மத்திய அரசு வெவ்வேறு முறைக் காரணங்களின் பெயரால் பறிக்கப்படுவதை அனுமதிக்க முடியாதெனவும், அப்படி அனுமதித்தால் சபை வெறும் பொம்மையாகவே செயற்பட முடியும் என ஒரு இளம் மாநகர சபை உறுப்பினர் தெரிவித்தார்.

வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை என மத்திய அரசு தமிழ் மக்களின் காணிகளையும் அபகரித்து வரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே இம்முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது எனவும் இதை முளையிலேயே கிள்ளியது ஒரு நல்ல முயற்சி என ஒரு முதியவர் தெரிவித்தார்.

**பேசுவது அதிகாரப் பகிர்வு**
**பேணுவது அதிகாரப் பறிப்பு**

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்

வாட்சப்ல பொங்கல் வாழ்த்து சொல்லி வந்த மெசேஜ் எல்லாத்தையும் டெலிட் பண்ண..



சம்பளத்துக்கு ஆள் தான் வைக்கணும் போல..😅😅😅

தயவு செய்து யூடியூப்பில் சமையல் குறிப்புகள் பதிவேற்றாதீர்கள்...





நீங்க பாட்டுக்கு சொல்லிடுறீங்க, 'அனுபவிக்கிறது' நாங்க தான் வாய்ல வைக்க முடியல... 😒😁

பாஸ்போர்ட் சைஸ் போட்டோ எடுக்கணும்,ஆனா செருப்பு வரை தெரியணும்..




எடுத்துறலாம், செருப்ப கழட்டி தலையில வச்சிக்கிட்டு சேர்ல உக்காரு... 😅






அப்போ,பகல்ல என்னதான் செஞ்சீங்க?

ஸ்கூல் படிக்கிறப்போ இந்திய வரைபடம் வரைய சொன்னாங்க ஒழுங்கா வரைய தெரியல... ஆனா...



இப்போ சப்பாத்தி தேய்க்கும் போது உலக வரைபடமே கரக்டா வருது...

😄 😜 😉

மாட்டை அடக்குறவருக்கு என் மூத்த பொண்ண கட்டிகொடுப்பேன்...




யோ மாம்ஸ் கன்னுகுட்டிய அடக்கிட்டேன் இளைய பொண்ணு எனக்குதான்...😛😛







உன்னோட எதிர்கால லட்சியம் என்ன..?



எதிர்காலத்துல எவனுக்கும் இந்த மாதிரி கைகட்டி நின்னு பதில் சொல்லக் கூடாது சார்..! 😆😆😆

இந்த உலகத்தையே ஒரு கலக்கு கலக்கணும்னு ஆசை😁😁😁😁😁😁😁😁




ஆனால் அவ்வுளவு பெரிய கரண்டிக்கு எங்க போறதுன்னு தெரியல😅😅😅😅😅😅😅😅😅😅😅😅😅

ஏதாவது தேவை என்று வரும் போது மட்டும்..... உன்னுடைய நினைவு யாருக்காவது வருகிறதென்றால்...




உன்னை விட இளிச்சவாயன் யாரும் இல்லை என்று அர்த்தம்...😁

## அப்பாவின் டைரியில் ஒரு அழகான வரி



என் மகன் உறவு எனக்கு அவன் மனைவி வரும் வரை.என் மகளின் உறவு என் ஆயுள் உள்ள வரை.

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## அடாத்துவாத பௌத்தம்!

அகிம்சையின் சொரூபம் கௌதம புத்தர். கருணை ததும்பும் அவர் முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அவரிடம் குடிகொண்டிருக்கும் அன்பு, கருணை, கொல்லாமை, பொய் சொல்லாமை, பிறர் பொருளுக்கு இச்சைப்படாமை ஆகிய பண்புகள் எமக்கும் சொந்தமாகி விடும். தமிழர்களுக்கும் பௌத்தத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இலங்கையில் பௌத்தம் நீடித்ததற்கு - அது இலங்கை முழுவதும் விரவி இருந்ததற்கு ஆரம்பத்தில் தமிழர்களும் பௌத்தத்தைப் பின்பற்றினார்கள் என்பதும் காரணம்.

போரால் தமிழர் தேசத்தைக் ஆக்கிரமித்த சிங்கள - பௌத்த பேரினவாதிகள், இன்று புத்தர் சிலைகளாலும், விகாரைகளாலும் ஆக்கிரமிக்க முயல்கின்றனர். கடந்த வாரம் உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட தையிட்டிப் பிரதேசமும், வவுனியா வெடுக்குநாறி மலை, திருக்கோணேஸ்வர ஆலய சூழல், நாயாறு நீராவியடி என நீளும் பிரதேசங்களில் நிறுவப்பட்ட புத்தர் சிலைகளும், விகாரைகளும் இதற்கு சமீபத்தைய உதாரணங்கள். இதனால் அகிம்சா மூர்த்தியாக, கருணையின் வடிவமாகப் பார்க்கப்பட வேண்டிய புத்த பகவான் ஆக்கிரமிப்பின் அடையாளமாக மாறிப்போனார் - பார்க்கப்படுகின்றார்.

புத்த பகவான் தர்மங்களைப் போதித்தவர், போதனைகளுடன் மட்டும் அவர் நின்றுவிடவில்லை. தர்மத்தின் வழி நின்று, பிறப்புத் தளையிலிருந்து எவ்வாறு விடுதலையடைவது என வாழ்ந்து காட்டினார். இதனால்தான் அவரை கடவுளுக்கு இணையான இடத்தில் வைக்கப்படுகிறார். பௌத்தர்கள் கடவுளை நம்புபவர்கள் அல்ல கர்மங்களையே நம்புபவர்கள். அனைத்துமே கர்மவிதிகளுக்குக் கட்டுப்பட்டவை என்பதை ஆழ வலியுறுத்தி - அனைவரையும் பேதங்களின்றி இம்மையிலிருந்து விடுதலைக்கு வழிகாட்டுபவர்கள் பிக்குகள்.

இதனால்தான் இல்லறத்தாருக்கு பஞ்சசீலக் கொள்கைகளை வலியுறுத்திய பௌத்தம் பிக்குகள் 'தச சீலங்களை மேற்கொண்டு, அடக்கமானபேச்சையும், அடக்கமானசெயலையும் உடையவராய், உலகப் பற்றுக்களை நீக்கித் துறவறத்தை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது. ஆனால், நம் நாட்டில் ரௌடிகள், காவாலிகள், காடையர்களை விட பிக்குகளின் பேச்சுகளும், செயல்களும் மோசமானவையாக உள்ளன. ஞானசார தேரர், சுமண தேரர், நாயாறு நீராவியடி பௌத்த தேரர், நயினாதீவு பௌத்த தேரர்கள், இராவண பலய, பொதுபலசேனா பிக்கு உறுப்பினர்கள் என நீளும் இத்தகைய பிக்குகளின் பட்டியல் இலங்கையின் புதிய பௌத்தவாதத்துக்கு அடித்தளமிட்டுள்ளது.

'முள்ளிவாய்க்கால்தான் தமிழர்களுக்கு தீர்வு" என்று மல்வத்து - அஸ்கிரிய பௌத்த பீடங்களின் தலைவர்கள் கூறுகிறார்கள். நாட்டின் அதிமுக்கிய பீடாதிபதிகளே இவ்வாறு கொலைவெறிக் கருத்துக்களை பரப்புகையில், பிக்குகளை கண்காணிக்க வேண்டிய. ஒழுங்கு - ஒழுக்கம் மீறும் பிக்குகளை தண்டிக்க வேண்டிய மஹாநாயக்கர்களோ அமைதி காத்து வருகிறார்கள். இதன் மூலம் அழிப்புவாத - அடாத்துவாத பௌத்தம் பிறப்பெடுத்து நாடெங்கும் வன்முறையும் - அழிவும் - பரவ அடித்தட்டு வர்க்க பிக்குகள் கொள்கை வகுக்கிறார்கள். மஹாநாயக்கர்களின் ஆசியும் - சம்மதமும் கிடைத்திருப்பதால் தேரவாத பௌத்த நெறியில் இருந்து முற்றாக விடுபட்ட இலங்கையில் அடாத்துவாத பௌத்தம் வேகமாகப் பரவுகிறது.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 36

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

'எனக்கு களைப்பா இருக்கு. ஓரிடத்தில நிம்மதியா இருக்க விடுங்கோ. தண்ணி தேவை என்றால் மெல்ல நடந்து போய் நீங்களும் எடுக்க முயற்சி செய்யுங்கோ..." எனக் கூறியபடி தரையில் பனைவடலி நிழலோடு படுத்துக் கொண்டேன். இந்த உலகம் எவ்வளவு சுயநல மனிதர்களைச் சுமக்கிறது. அதன் பாரம் தாங்க முடியாமல் தான் இயற்கையாகவும் செயற்கையாகவும் பேரிடர்களைத் தோற்றுவிக்கிறதா?

சந்தோஸ் கொண்டு வந்த தண்ணீரையும் கணவரின் அத்தான் மடக்மடக்கென குடித்துத் தீர்த்தார். எனது நான்கு வயது மகன் தண்ணீ... எனக் கேட்ட மழலை மொழி அந்த மனிதனுக்குக் கேட்டதாகத் தெரியவில்லை. கணவருக்கு கோபம் வந்து விட்டது. குழந்தைக்கு கொடுக்காமல் முழுவதையும் குடித்து விட்டீர்கள் எனச் சொல்லி விட்டார்.

'நான் என்ன வேணுமென்றே குடிச்சனான்? விடாச்சது. குடிச்சிட்டன்" எனச் சொல்லியபடி எழுந்திருந்து தனது கால்களைத் தடவிக்கொண்டார். கணவர் அவரது செய்கை பிடிக்காமல் தலையை மறுபுறம் திருப்பிக்கொண்டார். தோழியும் தோழியின் மாமியும் தண்ணீரோடு வந்தனர். எனது மகன் தண்ணீர் அருந்தினான். களைப்பில் என் அருகில் படுத்து உறங்கத் தொடங்கினான்.

சற்று, கண்ணுறங்கிய என்னை ஒரு அவல அழுகைக் குரல் திடுக்கிட்டு எழ வைத்தது.'எந்த ஜென்மத்தில் இனி உங்களை எல்லாம் பார்ப்பேனோ? என்னை மட்டும் தனியாக விட்டிட்டு போட்டியளே. நான் என்ன பாவம் செய்தேனோ? நான் என்ன பாவம் செய்தேனோ? விழுந்த செஷல்லுக்க எல்லோரும் ஒற்றுமையா போட்டியள். என்னை தனிக்க விட்டிட்டியள். என்ர ராசா... என்ர செல்லங்களே..." அவள் ஒப்பாரி பாடினாள். துயருற்ற யாவரும் துயர் மேவ கண்ணீர் சொரிந்தனர். நாங்களும் அழுதோம். இழந்தவர்கள் இடிவிழுந்த இதயத்தோராய் விம்மி விம்மி கரைந்தோம்.

அவள் குடும்பத்தை இழந்து கதறிக் கொண்டிருந்தாள். ஆறுதல் சொல்ல அவளுக்கு யாரும் இருக்கவில்லை. தனித்திருந்தாள். உற்றார், உறவினரென யாரும் அவள் அருகிலில்லை. என்ன நடந்தது? என விளக்கம் கேட்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. எல்லோரும் இழப்புக்களை சுமந்து சுமந்து ஓடும்போது இழப்புக்களின் வலிகளைச் சுமந்துதான் இருந்தோம். ஆனால் ஓய்வற்ற பதுங்குகுழி அமைப்பும், நாள் ஒன்றை குண்டுச் சொரியல்களில் இருந்து தப்ப எடுத்துக்கொண்ட முயற்சிகளும் எஞ்சியவர்களை காத்துக்கொள்ள போராடிய உணவுத்தேடல்களும் அடிப்படை நலக்குறைவுகளும் துன்பத்தை நெருடித்தோண்ட முடியவில்லை.

இப்போது குண்டுச் சத்தங்களில்லை. அவலப்பட்டு ஓட வேண்டிய தேவை இல்லை. உறவுகளை இழந்த துயரோடு வாழ்ந்த மண்ணை இழந்து இனி என்ன? நடப்பது நடக்கட்டும் என்ற விரக்தி மனநிலைக்குள் வந்து விட்ட நலிந்த நிலைக்குள் அமைதியான, ஓட்டம் பதற்றமற்ற ஒரு சூனிய அமைதி சூடிய பிரதேசத்தில் தப்பியோர் இழந்தவர்களை நினைத்துப் புலம்ப நேரம் கிடைத்த இடமாகவும் அந்த சூனிய வெளி விளங்கியது. சிலர் மனப்பிறழ்வு அதிகரித்த நிலையில் தமது குடும்பத்தவர்களின் இழப்புகளை ஏதோ அம்புலி மாமா கதை போல மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டனர்.

குடும்பத்தை இழந்த அந்தப் பெண்ணின் ஒப்பாரியால் நானும் பிள்ளையை, உறவுகளை நினைத்து அழத் தொடங்கினேன். நான் அழுவதைக் கண்டு முன்னர் அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினியை மோசமாக திட்டிய பெண் என்னை அணைத்து ஆறுதல்படுத்தினார். முன் பக்கமாக அந்த அக்கா இருந்ததால் அவருக்குப் பின்னால் ஒரு காயப்பட்ட சிறுமி இருந்ததை நாம் கவனிக்கத் தவறி விட்டோம். சற்று அருகருகே இருந்தாலும் அவரவர் வேதனையும் மனச்சுமைகளாலும் உன்னிப்பாக எதையும் கவனிக்கும் திறனை இழந்திருந்தோம் போல.

அந்தச்சிறுமி அந்த அக்காவின் சகோதரி. அவள் முதுகுப் பகுதியில் காயமடைந்திருந்தாள். முள்ளந்தண்டில் பீஸ் இருப்பதாக வைத்தியர் சொன்னார் என அவள் கூறினாள். அவளது காயத்தில் இருந்து ஊனம் வடிந்து கொண்டிருந்தது. ஆமிக்காரர்கள் காயப்பட்ட பிள்ளைகளை வாகனத்தில் ஏற்றியபோது அவர்கள் கண்களில் மண்ணைத் தூவி அக்கா காவிக்கொண்டு வந்திருக்கிறாள். உருவத்தில் அந்தச் சிறுமி சிறுத்திருந்தாள். எழுந்திருக்க முடியாததால் ஒரு நத்தைச்சுருள் போல கைகளை ஊன்றி ஒரு பக்கவாட்டாக சாய்ந்திருந்தாள். ஓட்டமும் நடையும் விழுதலும் எழுதலுமாக இருந்தாலும் எங்கட சனங்கள் காணி உறுதி, குடும்பப் பங்கீட்டு அட்டை, தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ்களை பெரும்பாலானவர்கள் கையோடு எடுத்து வந்திருந்தனர். அதன் பெறுமதி மிகப்பெரியதே.


'பிள்ளை நாங்கள் போராட்டத்தை பிழை என சொல்லவில்லை. தலைவர் பிழை என சொல்லவில்லை. கடைசில மக்களுக்காக போராடியதன் அர்த்தத்தை சிதைத்து விட்டார்கள். நாங்கள் விசுவமடுவில் இடம்பெயர்ந்து இருந்த போது தான் இவளை தமிழினியும் சில பெண் போராளிகளும் இணைந்து ஏதோ எதிரியை வியூகம் செய்து பிடிப்பது போல இவளைப் பிடித்தார்கள். நானும் போராளிதான். எனக்கு குழந்தை பிறக்க இருந்ததால் அம்மா வீட்டில இருந்தேன்.

தங்கைச்சி சின்னப்பிள்ளை என்று அம்மாவும் நானும் சொல்லியும் தமிழினி கேட்கேல்லை. பலவந்தமாகப் பிடிச்சுக்கொண்டு போக அம்மா பிறப்பு சான்றிதழை காட்ட தமிழினி பார்க்காதது போல போனவா. 'சற்றுப் பதற்றமும் கோபமுமாக ஒரு பையில் இருந்து அந்தச் சிறுமியின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை எடுத்து என்னிடமும் காட்டினார். அவள் 1994 பிறந்திருந்தாள். நான் ஒன்றும் பதிலளிக்காதிருந்தேன்.

(சாட்சியம் நீளும்)

# காணாமல் போனவர்கள் இனி வர வேண்டாம்

■ சாந்தி நேசக்கரம்



நீலக்கோடுகள் அடர்த்தியாய் வரையப்பட்ட சாரமும் வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தான். சனநெரிசலை விலக்கி வந்து கொண்டிருந்தவன் தனது நடையின் வேகத்தைக் கூட்டி ஓடிவரத் தொடங்கினான். கையில் ஒரு பை அதனுள் எதையோ வைத்துக் காவிக்கொண்டு ஓடி வந்தான். அவளைப் பெயர் சொல்லி அழைத்தான். கையில் இருந்த பையிலிருந்து ஒரு அழகான பெட்டியை அவளிடம் நீட்டினான். ‘இது உன்னுடைய மகனுக்காக நான் எடுத்து வைச்சிருந்தனான். இத அவனிட்டைக் குடு மாமா தந்தனெண்டு...!”

அவன் கொடுத்த பெட்டி தவறி கீழே விழுந்தது. அதனுள் சில்லறைக் காசுகள். நிலத்தில் சிதறிய காசுகளைப் பொறுக்கிப் பெட்டியில் பத்திரப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தாள். பச்சையுடை உடுத்த சட்டித் தொப்பியணிந்தவர்கள் அவனைச் சூழ்ந்தார்கள். பாதணி அணியப்படாத வெறும் காலோடு சகதி நிறைந்த ஆற்றுநீரில் இறங்கினான். ஆற்றுநீர் அவனைத் தன் மெல்லிய கால்களோடு இழுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தது.

அவன் பெயரைச் சொல்லிக் கத்தியழுதாள். சிரித்தபடி அவளிடம் வந்தவன் இரத்தம் வழிய ஆற்றோடு அடிபட்டு இழுபட்டுப் போய்க்கொண்டிருந்தான். மெல்லென ஓடிக்கொண்டிருந்த ஆற்று நீரில் அவனது குருதியும் கலந்தோடியது. ஆற்றோடு இழுபடும் அவனை நோக்கிக் கைகளை நீட்டியழுதாள் அவன் கண்ணிலிருந்து விடுபட்டுத் தொலைவாகிக் கொண்டிருந்தான்...!

அவசரமாக எழுந்தாள். சே... கனவு...! உறங்கிக் கொண்டிருந்த மகனின் அறையைத் திறந்து மின்விளக்கைப் போட்டாள். என்னம்மா...! நித்திரைத் தூக்கத்தில் கேட்டான் மகன். சரி படுங்கோ செல்லம்....! சொல்லிவிட்டுத் தன் கட்டிலில் வந்து மீண்டும் சரிந்தாள். ஆனால் அந்தக் கனவில் சிரித்தபடி வந்தவன் இரத்தம் கலந்து ஆற்றோடு அடிபட்டுப் போனது மனசுக்குள் ஏதோ அந்தரிப்பாயிருந்தது. திரும்ப நித்திரை வர மறுத்தது. மனசுக்குள் ஏதோ அந்தரிப்பாயிருந்தது.

2009 இன் பின்னர் அனேகமான கனவுகள் இப்படித்தான். காணாமல் ஆக்கப்பட்டோரின் முகங்களும் கடைசியாய் சிரித்தபடி விடை தந்து போனோருமே நிறையும் கனவுகளாகியிருக்கிறது. அவர்கள் பிரிவும், துயரங்களும் கனவுகளையும் நிம்மதியாய் விடாமல் துரத்திக் கொண்டிருக்கிறது. இன்றைய கனவில் வந்தவனும் 2009 இல் காணாமல் ஆக்கப்பட்டவன். இந்த 5 வருடத்தில் ஒருமுறையும் கனவில் வராதவன் இன்று வந்து போயிருக்கிறான். சிலவேளை எங்கேனும் இருப்பானோ ? கைபேசித் திரையைத் தட்டி இணையத்தில் உலாவத் தொடங்கினாள். அவனது பெயரை கூகுளில் அடித்துப் பார்த்தாள் ஏதாவது செய்திகள் அண்மையில் வந்ததோ எனத் தேடினாள். அப்படியேதும் இருக்கவில்லை. ஆனால் நினைவுகளில் இருந்து மறந்து போனவன் ஏன் இன்று கனவில் வந்து சில்லறைக் காசுகளை அவளது மகனுக்காக கொடுத்துவிட்டுப் போயிருக்கிறான் பெரும் குழப்பமாகவே இருந்தது.

கனவுகளுக்கு காரணங்கள் ஆய்வுகள் ஆயிரம் சொல்லப்பட்டாலும் இதுவரை கனவுகள் பற்றி எவரும் சரியான ஆய்வை காணாமல் இருப்பது பற்றி அந்த நேரம் யோசித்தாள். இப்போது கனவுகளை யாருடனும் பகிர்ந்து கொள்வதில்லை. கனவுகளைப் பகிர்ந்து கொண்டால் அது பலிக்காதென்று சொல்வதை நம்பி பலமுறை தனது கனவுகளை பகிரப்போய் எல்லோரிடமும் நன்றாக வேண்டிக் கட்டியிருக்கிறாள். ஒண்டையே ஒரே நினைச்சுக் கொண்டிருந்தால் கனவும் அதுதான வரும்....! எல்லோரும் சொல்வார்கள். அதனால் கனவுகளை யாரோடும் பகிர்ந்து கொள்ளாமல் அந்தக் கனவிலிருந்து விடுபடும் வரையும் அமைதியின்றி அலைவாள். மௌனமாய் நினைவுகளோடு கரைதலும் பின்னர் மீள எழுதலுமே வளமையாகிப் போனது.

• • •

அவனும் அவளும் ஒரே ஊரில் பிறந்திருந்தார்கள். அவன் அப்பா அவளது தாய்வழி உறவு. மாமா என்ற மதிப்போடு அவனது அப்பா அவள் வீட்டுக்கு வந்து போகும் போதெல்லாம் அவனைப் பற்றி ஏதாவது சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டேயிருப்பார். அவன் க.பொ.த. சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கணித பிரிவில் உயர்தரத்தை ஆரம்பித்திருந்தான். அவனிலும் 2 வயதால் இளைய அவள் அவனது கடைசித் தங்கையுடன் படித்துக் கொண்டிருந்தாள்.

ஆண்களும் பெண்களும் கலந்து படித்த பாடசாலைக்கு அவள் ஆறாம் வகுப்பில் இணைந்த போது அவனும் கூடவே வருவான். மதியம் பேயுலவும் என்று நம்பிய புளியமரத்தடியை அவன் வரும் துணிவோடு பயமில்லாமல் கடந்து போவாள். பனை வடலிகளைத் தாண்டிப் போகும் போதெல்லாம் அவனே துணையாக வந்திருக்கிறான். பின்னர் அவனது கடைசித் தங்கையுடன் சேர்ந்து போகும் போது அவனும் கூடவே அவர்களோடு சைக்கிளில் வருவான். அதிகம் கதைக்க வேண்டிய தேவைகள் இல்லாது போனாலும் அவன் தங்கைக்கு காவலனாய் வரும் போது அவளுக்கும் காவலாயே வருவான். வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் வைரவர் கோவிலில் பஜனை பாடும் போதும் அவனும் வருவான். நெற்றியில் விபூதியும் சந்தனமும் வைத்து அமைதியாய் வைரவரை வழிபடுவான். சரஸ்வதி பூசைக்கு பேச்சுப்போட்டி , தேவார மனனப்போட்டி எல்லாவற்றிலும் அவனும் கலப்பான். ஆளாளுக்கு போட்டி போட்டு பரிசை வெல்வார்கள்.

எதுவென்று பிரித்தறிய முடியாத உறவிணைப்பு. அவன் வீட்டு வளவில் காய்க்கும் நெல்லிக்காய் , கொய்யாக்காயிலிருந்து எல்லாமே அவன் எல்லோருக்கும் பங்கிடுவான். சிறுவயது மகிழ்ச்சிக் காலங்களில் அவனோடு சேர்ந்து கிளிக்கோடு மறித்தது தொடக்கம் எட்டுப்பாத்தி, மாங்கோடு, கப்பல் கோடு வரையும் போட்டி எப்போதுமே அவனுடன் இருந்து கொண்டேயிருந்தது. உயர்தரம் கணித பிரிவில் படிக்க ஆரம்பித்து சில மாதங்களில் அவன் ஊரிலிருந்து காணாமற்போனான். அது இந்திய இராணுவம் வெளியேற்ற காலம். அவனுடைய அப்பா அவள் வீட்டுக்கு வந்து போகும் நேரமெல்லாம் கண்கள் பனிக்க அவனைப் பற்றிச் சொல்லுவார். “என்ன குறைவிட்டனான் ? ஏன் இப் பிடிச் செய்திட்டுப் போனவன்?” அவரது கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் அவளது அம்மாவுக்குச் சொல்லுவார், ‘அவன் ஒரு பெரிய ஆளா வருவனெண்டு தான் படிப்பிச்சன்... ஆனால் அவருக்கு நாடு பெரிசெண்டு போயிட்டார்...!”

அந்த அப்பாவின் வலியின் கொடுமை அவளுக்கு அப்போது புரிந்ததில்லை. ஆனால் அவனைப் பற்றி பெருமையாக இருந்தது. மனதில் சின்ன நெருடல் அவ்வப்போது இருந்தாலும் அவன் ஒருநாள் துவக்கோடு ஊரில் வந்து வரிச்சீருடையுடன் அவளையும் தாண்டி மோட்டார் சைக்கிளில் போனபோது ஏனோ இனம்புரியாத துயரம் மனசை நெருக்கியது. அவனது உயிர் இன்று அல்லது நாளை போய்விடும்போல அவனது கடமை அமைந்து அவன் களத்தில் நின்றான். எங்காவது எதேச்சையாக காணும் நேரங்களில் ஒரு சிரிப்பு அவ்வளவுதான் அதற்கு மேல் எதுவுமில்லை. அவனை உறவென்று சொல்லிக் கொள்வதில் ஒருவகை பெருமிதம்.

(மறு பக்கம் பார்க்க)

1990 மேலும் ஊரிலிருந்து ஆண்கள், பெண்கள் காணாமற் போனார்கள். அவன் போன கடுமையான பயணத்தில் பலர் இணைந்தார்கள். மீண்டும் இடப் பெயர்வு, குண்டுச் சத்தங்கள், மரணங்கள் அவலத்தின் பொழுதுகள் அவன் பிறகு காணாமற் போய்விட்டான். பொறுப்பாளராய் உயர்ந்து ஓமந்தையில் நிற்கிறான் எனச் சொன்னார்கள்.

காலநதியில் எழுதப்பட்ட கதைகள் பல அவை கண்ணீராலும் எழுதப்பட்டு கரைந்து கொண்டேயிருந்தன. அவள் நாட்டை விட்டுப் பிரிந்தாள். திருமணம் குழந்தைகள் என வாழ்வு மாறிப்போனது. அவன் நடந்த களத்திலிருந்து தூரமாகினாள். இடையில் களங்கள் இறுகி தொடர்புகள் அறுந்து உறவுகள் அயல் எல்லாம் எங்கெங்கோ பிரிந்து போனார்கள். அவனும் நினைவுகளிலிருந்து மறந்து போகாமல் பல தோழர்களின் நினைவுகளோடு அவ்வப்போது நினைவுகளோடு வந்து போயிருக்கிறான். உறவொன்றைச் சந்தித்த போது அவனைப் பற்றி விசாரித்தாள். அவன் ஒரு தளபதியாகத் தகுதிநிலை உயர்ந்தானென்று தகவல் சொன்னார்கள். ஒரு பெண் போராளியை திருமணமும் செய்தானென்றும் சொன்னார்கள்.

காலம் 2002...,

மீண்டும் தாயகப்பயணம் போனபோது அவனது கடைசித் தங்கையைத் தேடிப்பிடித்தாள். முல்லைத்தீவில் ஒரு அழகான தென்னந்தோப்பு வளவில் குடியிருந்தார்கள். 'அண்ணா என்ன செய்றான்?", கேட்ட போது அவனது சின்னத்தங்கை அவனைப் பற்றிச் சொன்னாள். சந்திக்கக்கூடிய இடத்தில் அவன் அப்போது இல்லை என்றார்கள். மீண்டும் 2003 இல் பிள்ளைகளோடு போனபோது கிளிநொச்சியில் அவன் அரசியல் அலுவலகத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்தக்கால அவசரங்களோடு அவனும் அலுவலாகியிருப்பதாக சொன்னார்கள்.

ஒருநாள் அறிவமுது புத்தகசாலையில் அவள் புத்தங்கள் வாங்கப் போயிருந்தாள். பலர் புத்தகக் கடைக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவள் ஒவ்வொரு புத்தகங்களையும் பார்த்துப் பார்த்து அது வேணும் இது வேணும் என எடுத்துக் கொண்டிருந்தாள். "என்னக்கா கடை போடப்போறியளோ? புத்தகக் கடையில் நின்ற தம்பியொருவன் கேட்டான்.

மேலும் சிலர் வந்தார்கள். அவள் புத்தங்களை பார்த்துப் பார்த்து எடுத்துக் கொண்டிருந்தாள். பலசரக்குக் கடைக்கு சீனிச்சரை சுத்தவோ உவ்வளவு புத்தகமும் ஒருவன் சொன்னது கேட்டது. திரும்பிப் பார்த்த போது அவன் தனது முகத்தைக் காட்டாமல் மறுபக்கம் திரும்பி நின்றான். இடுப்பில் பெலிற் கட்டி பிஸ்ரல் செருகிகியிருந்தான். பிஸ்ரல் கட்டிய ஒருவர் "சீனிச்சரை சுத்தவோ புத்தகங்கள்" என்றது சட்டென கோபத்தைக் கொடுத்தாலும் அதை வெளிக் காட்டாமல் புத்தகங்களை எடுத்தாள்.

பிள்ளைகள் வெளியில் ஐஸ்கிறீம் வாகனத்தைக் கண்டதும் ஐஸ்கிறீம் வேணுமென அடம்பிடித்தார்கள். பிள்ளைகளுடன் அவளுக்கு உதவியாய் வந்திருந்த தம்பியிடம் சொன்னாள். "தம்பி ரெண்டு பேருக்கும் ஐஸ்கிறீம் வேண்டிக் குடுக்கிறீங்களே நான் புத்தகத்தை எடுத்திட்டு வாறன்."

"ஓமக்கா..." என்றவன் "வாங்கோ நாங்க ஐஸ்கிறீம் வாங்குவம்" எனப் பிள்ளைகளை கூட்டிக் கொண்டு தெருவுக்குப் போனான். 123 புத்தகங்களை கொள்வனவு செய்து கொண்டு வெளியில் வந்தாள். பிள்ளைகள் ஐஸ்கிறீமும் கைகளில் விளையாட்டுப் பொருட்கள் சிலவற்றையும் வைத்துக் கொண்டு தம்பியுடன் நின்றார்கள். "அரசியல்துறை அண்ணையொராள் வந்தவர் பிள்ளையளுக்கு ஐஸ்கிறீமும் விளையாட்டுச் சாமானுகளும் வாங்கிக் குடுத்திட்டு போறார்" என்றான். உங்கடை ஊராம் உங்களைத் தெரியுமாமெண்டு சொன்னவர். பிள்ளையளுக்கு தான் மாமாவெண்டு சொல்லி உதெல்லாம் வேண்டிக் குடுத்தவர்.

தம்பி சொல்லியும் அது யாரென்பது புரியவில்லை. அவனின் நினைவும் வரவில்லை. வீடு போன பின்னர் தம்பியிடம் அவனது பெயரை விசாரித்ததில் அவன் நினைவில் வந்தான். சமாதான செயலகத்தில சொல்லிவிட்டால் ஆளைப் பாக்கலாமக்கா...!

அண்மையாக சந்தித்தவன் பேசாமல் போனது கோபமாக இருந்தது. தம்பி சொன்ன பிறகும் கௌரவம் விடாமல் அவனைச் சந்திக்கும் முயற்சியை எடுக்கவில்லை. எங்கே நிற்கிறாள் யாருடன் நிற்கிறாள் என்பதெல்லாம் நிச்சயம் அறிந்திருப்பான். அப்படியிருக்க அருகில் வந்தும் பேசாமல் போனானென்றால்... திமிர் என தனக்குள் முணுமுணுத்தாள். ஆளாளுக்கு பிடிவாதத்தில் சந்திக்க முயற்சியெடுக்கவில்லை. அவள் ஐரோப்பா திரும்பிவிட்டாள்.

2006இல் இந்தியாவில் இருந்த அவனது சித்தி நோய்வாய்ப்பட்டு இருப்பதாக அறிந்து கதைக்க எடுத்தபோது கதையோடு அவனது கதையும் வந்தது. "நீயென்னடி 3 மாதம் கிளிநொச்சியில் நிண்டியாம் தன்னை ஒருமுறைகூட பார்க்க வரேல்லயெண்டு சொன்னான். ஏனடியாத்தை ஒருக்கா பிள்ளையளையும் காட்டிப் பாத்திருக்கலாமெல்லே?"

"புத்தகக்கடையில கண்டவர் ஏனன்ரி என்னோடை கதைச்சிருக்கலாம்தானே...! பிள்ளையளுக்கு விளையாட்டுச் சாமானுகளை வாங்கிக் குடுத்திட்டு போகத் தெரிஞ்சவர் கதைச்சா என்ன குறைஞ்சே போயிடுவர்?"

"நீ தன்னை அடையாளம் பிடிக்கிறியோ எண்டு பாக்கத்தான் அவன் கடையில கண்டிட்டு கதைக்காமல் போயிருக்கிறான். சீனிச்சரை சுத்தவோ புத்தகமெண்டு சொன்னவனாம்... அப்ப பக்கத்திலதானே நிண்டவனாம்...!"

"சத்தியமா எனக்கு அடையாளம் தெரியேல்லயன்ரி...! எத்தின வரியம் இப்பத்தைய தோற்றத்தை என்னாலை அடையாளம் காண முடியேல்ல...வேணுமெண்டு தானே கதையாமல் போனவர்...!"

பழைய குரல் நினைவிருக்கலாம் என நினைத்தானோ என்னவோ...! "அவன் கொஞ்சம் வீம்பு பிடித்தவன்" என்பாள் அவளது தங்கை. அதற்காக அருகில் நின்றும் தன்னை அடையாளம் காட்டாமல் போனவன் மீது சொல்ல முடியாத கோபம். ஆளாளுக்கு பிடிவாதம் பிடித்து சந்திக்காமல் தொடர்பு கொள்ளாமல் விட்டு அதுவொரு சின்ன வயசுக்கால கோபம் போலவே போய்விட்டது.

அவனைப்பற்றி பலரும் கதைத்தார்கள். அவனது பதவிநிலை, பணிகள், திறமை எல்லாவற்றையும் ஊரவர்கள் தொடக்கம் அவனது பெயரையும் காலம் உச்சரித்துக் கொண்டேயிருந்தது. அவனது அலுவலகத்தில் அவனுக்கு உதவியாளராயிருந்த அவனது துறைசார் போராளியொருவனுடன் ஒருமுறை அலுவல் ஒன்றிற்காக தொடர்பேற்படுத்திய போது அவனைப் பற்றி அடிக்கடி அறியக் கிடைத்தது. ஒருமுறை அவனது உதவியாளர் அவனது நிழற்படமொன்றை மின்னஞ்சலிட்டிருந்தான்.

"சொல்லுங்கோ தம்பி அவர் கதைக்காட்டி நானும் கதைக்கமாட்டனாமெண்டு."

"ஐயோ கடவுளே இந்தக் குழந்தைப் பிள்ளையள் ரெண்டின்ரை தொல்லையும் எனக்கு பெருந்தொல்லையப்பா...! ஏன் அவ கதைக்கமாட்டாவோ எண்டு அவரும் இவ ஒராள் ஏன் அவர் கதைக்கமாட்டாரோ எண்டு....!" தம்பி ஒருமுறை கதைத்த போது இப்படித்தான் அலுத்துக் கொண்டான்.

காலம் ஓடியது யுத்தம் மூண்டது. இரத்தமும் அவலமும் தோய்ந்த நாட்களாய் விடியத் தொடங்கியது. தொடர்பில் இருந்த அவனது உதவியாளர் தம்பி இடையிடை தொடர்பு கொள்வான் சுகம் விசாரிப்பான். அவனும் ஆனந்தபுரம் சண்டை முடிவோடு இல்லாமல் போய்விட்டான். சொல்லாமல் கொள்ளாமல் காணாமற் போயிருந்தான்.

மே மாதம் 2009 உலகம் பரபரத்தது தமிழர்கள் மட்டும் கண்ணீரோடும் துயரத்தோடும் அந்தப் பொழுதுகளை வரவேற்றுக் கொண்டார்கள். எல்லாம் மாறியது. நினைக்காத சரணடைவு. கனவிலும் பார்த்திராத அந்த நிகழ்வு நடந்து... எல்லாம் முடிந்து போனது... பலரின் முடிவு போல அவனும் இறுதியில் சரணடைந்தானா? சாவைத் தனக்குத் தானே மூட்டினானா என எதுவும் தெரியாது.

தேடித் திரிந்தவர்களில் அவனும் ஒருவனாய் அவள் தேடினாள். அவனது குடும்பம் அவனது மனைவி , பிள்ளைகள் யாரையும் எங்கும் கண்டுபிடிக்கவில்லை. உறவுகள், நண்பர்கள் , தெரிந்தவர்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலில் அவனும் காணாமற்போயிருக்கிறான்.

இணையத்தில் செய்திகளைத் தேடுகிறாள். அவர் கைது, இவர் கடத்தல் என தமிழ் ஆய்வாளர்களின் ஆய்வுகளும் , செய்திகளும் தூள்பறக்கும் அலசல்களால் நிறைகிறது தமிழ் இணையங்கள். அவனது பெயர் இதுவரை எங்குமே வரவில்லை. துரோகியாய் ஆராயப்பட்டு அவன் வாழ்ந்த வாழ்வை எவரும் இதுவரை கொச்சைப்படுத்தாதது ஆறுதலாக இருந்தது. அவன் விரும்பியிருந்தால் வெளிநாடொன்றில் வசதியை அனுபவித்து தனது வாழ்நாளை கடத்தியிருக்கலாம். அவனது கணிதத்துறைக் கல்வியைத் தொடர்ந்து வென்றிருந்தால் ஒரு விஞ்ஞானியைக்கூட அவனது குடும்பமும் அவனது ஊரும் பெற்றிருக்கலாம். ஆனால் பதின்மம் மாறாத அந்த வயதில் தேசத்தை நேசித்துப் போனதால் அவன் காணாமல் போனான்.

எல்லோரையும் போல சுயநலமாய் இல்லாமல் பொதுநலமாய் யோசித்துத் தன்னை மறந்து தேசத்தை நேசித்த போராளிகளை மாவீரர்களை சமகால தமிழ்ச்சாதி கவனிக்கும் கவனிப்பையெல்லாம் பார்க்காமல் மறைந்தவரும் காணாமல் போனவரும் இனி வரவே வேண்டாமென நினைத்துக் கொண்டாள். ஒருவேளை காணாமற்போனவர்கள் திரும்பி வந்து இந்த நிலைமையைப் பார்த்தால் எதிரியிடம் பிடிபடாமல் இலட்சியத்தை வெல்ல அணிந்த சயனைட் வில்லைகளை இந்த சமூகத்தின் மீதான அவநம்பிக்கையை சகிக்க முடியாமல் தற்கொலைக்காக பயன்படுத்தக் கூடும். அவர்கள் வர வேண்டாம்... காணாமலேயே இருக்கட்டும்.

சின்னப்பிள்ளையள் மாதிரி ஆளாளுக்கு முரண்டு பிடித்து கதைக்காமல் தொடர்பு கொள்ளாமல் விட்டது இப்போது நெஞ்சுக்குள் வலியைத் தருகிறது. நீ முதல் கதைச்சாலென்ன என ஆளாளுக்கு அடம்பிடித்ததையும் ஒருகாலம் விளையாட்டாக ரசித்தது போல இப்போது ரசிக்க முடியவில்லை. இனி என்றுமே திரும்பக் கிடைக்காத அவனும் அவன் போன்றவர்களினதும் நினைவுகள் மட்டும் மீதமாக....!

(08.04.2014 - அண்மைய நாட்களில் வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளைப் படித்த போது எழுந்த உணர்வும் ஒரு காலத்தின் ஞாபகமும் ஒரு கனவும் தந்த பாதிப்பிலிருந்து இக்கதை பிறந்திருக்கிறது)

# புகைத்தல் இல்லாத நாளை நோக்கி...!




'**கா**லையில் ஒரு தம் அடிக்கலைனா அண்டைக்கு விடியாது", 'தம் இல்லைனா வாழ்க்கையே சுத்தபோர்", 'தம் பிடிக்காட்டி சாப்பிட்டது செமிக்காது", 'எதுவும் இல்லாம இருந்திடுவன் தம் மட்டும் இல்லாம இருக்கவே மாட்டேன்", - 'நீங்கள் ஏன் சிகரெட் பிடிக்கிறீர்கள்" தம் அடிக்கிறவரைக் கேட்டால் வரும் பதில்கள் இப்படித்தான் வரும்.

விளையாட்டாக, ஒருமுறை பிடித்துப் பார்ப்போமே என்று தொடங்கி இப்போது புகைபிடித்தலுக்கு அடிமையாகக் கிடப்பவர்கள் பலர். சட்டங்கள், விழிப்புணர்வு பிரசாரங்கள் என்று புகைப்பிடித்தலை கட்டுக்குள் கொண்டுவரப் பல நடவடிக்கைகள் எடுத்தாலும் புகைப்பிடிக்கும் பழக்கம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

வருடத்துக்கு 60 இலட்சம் பேர் புகைபிடிப்பதால் இறந்து போகிறார்கள் என்கிறது ஓர் ஆய்வு. புகைப்பிடிக்கும் பழக்கத்தை கைவிட பலர் முனைகின்றனர். ஆனால் ஒரு சிலரே அதில் வெற்றியடைகின்றனர். புகைபிடிப்பதன் பாதிப்புக்கள், இதிலிருந்து எப்படி வெற்றிகரமாக மீள்வது...? என்று பார்ப்போம்.

ஒரு சிகரெட்டில் நச்சுவாயுக்கள், இரசாயன மூலக்கூறுகள், வடிகட்டமுடியாத நுண் மூலப் பொருட்கள் என ஏறக்குறைய நான்காயிரம் இரசாயனங்கள் உள்ளன. புற்றுநோயை உருவாக்கும் கார்சினோஜன் (Carcinogen) இரசாயனங்களின் எண்ணிக்கை மட்டும் 43 உள்ளன. இவை நுரையீரல், வாய்ப்புற்று நோய்க்கான காரணியாகின்றது.

சிகரெட்டில் இருக்கும் நிக்கொட்டின் தான் புகைபிடிப்பவரை அடிமையாக்குகிறது. இது அல்கஹோல், கொக்கெய்ன் போதைகளை விட சுலபமாக புகைப்பவரை அடிமையாக்கி விடும். அத்துடன் பிற போதைப் பொருட்களையும் பயன்படுத்தத் தூண்டிவிடும். நச்சுப் பொருள்களின் கலவையான தார், இரத்தக் குழாய்களில் படிந்து ஓடும் குருதியை தடை செய்யும். இது மாரடைப்பை ஏற்படுத்தி மரணத்தை ஏற்படுத்தும், சில சமயங்களில் கைவிரல்கள், கால்கள் போன்ற உறுப்புகளின் நரம்புகளில் அடைப்பை ஏற்படுத்துவதால் அந்த உறுப்புகளை நீக்க வேண்டியும் ஏற்படலாம்.

சிகரெட்டில் உள்ள கார்பன் மொனாக்சைட் இரத்தத்தில் உள்ள ஒட்சிசனை வெளியேற்றும். இது நாளடைவில் உடல் உறுப்புகளை பலவீனப்படுத்தும்.

**புகைத்தலை தவிர்ப்பதால் ஏற்படும் பிரச்சினைகள்**

புகைப் பழக்கத்தை உடனடியாகக் கைவிடும்போது வித்ட்ராவல் சிம்டம்ஸ் (Withdrawal Symptoms) எனும் அரிதான பின்விளைவுகள் ஏற்படலாம். புகைப்பது பற்றிய சபலம் இருந்துகொண்டே இருக்கும். அடிக்கடி எரிச்சல், பதற்றம், தூக்கமின்மை, தலையிடி ஏற்படும். ஆனால் இவை தற்காலிகப் பிரச்சினைகளை குறுகிய நாள்களில் இது முடிவுக்கு வந்துவிடும்.

**கிடைக்கும் பயன்கள்**

புகைப்பதை நிறுத்திய 20 நிமிடங்களில் இரத்தக்கொதிப்பு, நாடித்துடிப்பு என்பன சீராகும்.

2 வாரம் தொடக்கம் 3 மாதங்களில் இரத்த ஓட்டம் சீராகும். நுரையீரலின் வேலை செய்யும் திறன் 30 வீதம் அதிகரிக்கும்.

9 மாதங்களுக்குள், இருமல், சளி, மூச்சுத் திணறல் குறையும். நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய் வரும் வாய்ப்புகள் குறையும். உடல் வலிமை அதிகரிக்கும்.

**நிறுத்துவது எப்படி?**

மனம் உண்டானால் மார்க்கம் உண்டு என்பது போல புகைபிடிக்க மாட்டேன் என்ற தீர்மானம் மட்டும் போதும். சிகரெட்டை முற்றாகக் கைவிடும் திகதியை தெரியுங்கள். இடைப்பட்ட நாளில் பிடிக்கும் சிகரெட்களை குறைத்துக் கொண்டே வாருங்கள்.

புகைப்பழக்கத்துக்கு காரணம் சொல்வதுபோல், அதை நிறுத்தவும் காரணங்களைப் பட்டியலிடுங்கள். உதாரணமாக, ஆரோக்கியம் கெடுகிறது, திருமணமாகப் போகிறது, மகள், மகன் விரும்பவில்லை.

புகைப்பிடிப்பதை நிறுத்துவது தொடர்பான முடிவை பிறருக்குத் தெரிவியுங்கள். நிறுத்தாவிட்டால் அவர்கள் கேள்வி கேட்பார்கள், நக்கலடிப்பார்கள் என்ற பயம் இருக்கும். உங்கள் மேல் அக்கறை உள்ளவர்கள் புகைத்தலைக் கைவிட உங்களுக்கு உதவுவார்கள்.

புகைப்பவர்களிடம் இருந்து விலகியே இருங்கள். சிகரெட் வாசனை மீண்டும் ருசி பார்க்க வைத்துவிடும். யாராவது வாங்கித் தந்தால் வேண்டாம் என்று சொல்லிப் பழகுங்கள்.

சிகரெட்டுக்கு மாற்றாக, அதிகம் தண்ணீர் குடிக்கப் பழகுங்கள், இனிப்பு, பிளம்ஸ், பபிள்கம் போன்ற பொருட்களில் கவனம் செலுத்துங்கள்.

சிகரெட் பழக்கத்தை விட்டால் பெருமை கொள்ளுங்கள், மனக்கட்டுபாடு இருந்தாலும் நிறுத்தமுடியாதவர்கள் மது மறுவாழ்வு நிலையங்களில் சிகிச்சை எடுப்பதுடன் நிக்கொட்டின் மாற்று சிகிச்சையும் எடுக்கலாம். ●

# உணவே மருந்து

## பனங்கிழங்கு



**ப**னைமரம் மனிதர்களுக்குப் பல்வேறு நன்மைகளைத் தருகிறது. குறிப்பாக, பனையில் இருந்து பெறப்படும் பதநீர், பனங்கட்டி, பனங்கிழங்கு என அனைத்தும் மருத்துவ குணங்கள் நிறைந்தவை. இப்போது பனங்கிழங்கு கிடைக்கும் காலம். பனங்கிழங்கால் கிடைக்கும் நன்மைகளைப் பார்ப்போமா...?

● நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பனங்கிழங்குக்கு உண்டு.

● குறைந்த சீனியின் அளவைக் (low glycemic index) கொண்டிருப்பதால் இன்சுலின் செயற்பாடுகளை அதிகரிக்கும்.

● நார்ச்சத்து அதிகம் இருப்பதால் சிறந்த மலமிளக்கியாகச் செயற்படுகிறது.

● மேக ஒழுக்கு உள்ளிட்ட பால்வினை நோய்களுக்கு ஒடியல் கூழ் மிகவும் நல்லது. பனங்கிழங்கைக் காய வைத்துப் பொடியாக அரைத்துக்கொள்ள வேண்டும். அதில் காய்ந்த மிளகாய், புளி, உப்புச் சேர்த்து நீர்விட்டுக் கொதிக்க வைத்துக் கிளறி இறக்கினால் கிடைப்பதே ஒடியல் கூழ்.

● உடல் சூட்டைத் தணிக்கும்.

● பனங்கிழங்கில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் (omega 3 fatty acid) உள்ளது. இது இதய நோய், உடல் பருமனைத் தடுக்கும்.

● வளர்சிதை மாற்றத்தை அதிகரித்து உடலைப் புத்துணர்வுடன் வைக்கும்.

● ஒடியல் கூழ், குழந்தைகளுக்கு ஊட்டம் தரும் உணவாகும். இதில் கொஞ்சம் மிளகுத் தூள் சேர்த்து, பெரியவர்கள் சாப்பிட்டால் பித்தம் விலகும். புரதச்சத்து மற்றும் ஃபோலிக் அசிட், விற்றமின், தாது உப்புகள் இதில் உள்ளன. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

# வாரபலன்

### மேடம்
வேலை பளுவால் குடும்பத்தினரோடு செலவழிக்கும் நேரம் குறையும். உடன்பிறந்தோருக்கு உதவி செய்ய நேரிடும். திடீர் பிரயாண வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் எதிர்கால வாழ்விற்காக புதிய திட்டம் ஒன்றை செயல்படுத்த முயற்சிப்பீர்கள்.

### துலாம்
எடுத்த செயல்கள் எதிலும் நற்பலன்கள் கிடைக்கும். நீங்கள் தேவை என்று நினைக்கும் பொருட்கள் வந்து சேரும். குழப்பம் இருந்தாலும் சுகமான வாழ்வியல் நிலையில் குறை நேராது. வரவு சிறக்கும். அடுத்தவர் மனம் புண்படாதபடி பேசுவது நல்லது.

### ரிஷபம்
நினைப்பது ஒன்றும், நடப்பது ஒன்றாகவும் ஆகி விரக்தி ஏற்படும். குடும்பத்தில் சல சலப்பு உண்டாகும். உங்கள் பேச்சு உங்களுக்கு எதிராகவே திரும்பக் கூடும். மாணவர்கள் ஞாபக மறதியால் சிரமப்படுவதை தவிர்க்க பாடங்களை ஒருமுறைக்கு இருமுறை எழுதிப்பார்ப்பது நல்லது.

### விருச்சிகம்
நினைத்த செயல்களில் மிகுந்த தைரியத்துடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். பெரிய மனிதர்களின் நட்பு உருவாகும். பொருளாதார நிலை உயரும். எதிர்கால நன்மை கருதி புதிய சேமிப்பில் ஈடுபட ஏற்ற நேரமாக இருக்கும்.

### மிதுனம்
எதிர்பாராத திடீர் செலவுகள் இருக்கும். வரவு சீராக இருக்கும். அடுத்தவர்களின் குடும்ப பிரச்னைக்கு சமரசம் காண வேண்டிய சூழ்நிலை உருவாகும். மாணவர்கள் நண்பர்களின் துணையோடு கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள்.

### தனுசு
எடுத்த செயல்களில் வெற்றி பெற எதிலும் அவசரப்படாமல் அமைதி காப்பது நல்லது. முன்பின் தெரியாதவர்களிடம் கூடுதல் கவனம் நல்லது. வரவு சிறக்கும். புதிய வீடு கட்டும் முயற்சியில் உள்ளோருக்கு சாதகமான நேரமாக இருக்கும்.

### கடகம்
நண்பர்களின் உதவியோடு பல காரியங்களை செய்து முடிப்பீர்கள். அரசுத் தரப்பு உதவிகள் கிடைக்கும். வரவு சிறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உடன் பிறந்தோருக்கு உதவி செய்வீர்கள். புதிய நண்பர்கள் சேருவார்கள்.

### மகரம்
தன்னம்பிக்கை கூடும். கடுமையாக உழைத்து எடுத்த காரியங்களை உடனுக்குடன் முடிக்க நினைப்பீர்கள். திட்டமிட்ட செயல்களில் தடை இருக்காது. வரவு திருப்தி தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். பேச்சில் நிதானம் இருக்கும். உடன்பிறந்தோரால் நன்மை உண்டாகும்.

### சிம்மம்
டென்ஷனால் உடல்நிலை பாதிக்கப்படலாம். கொடுக்கல் வாங்கலை தவிர்க்கவும். வரவை விட செலவுகள் அதிகரிக்கும். உடன்பிறந்தோருக்கு உதவி செய்ய நேரிடும். மாணவர்கள் நண்பர்களோடு இணைந்து படித்தால் நன்மை கூடும்.

### கும்பம்
நினைப்பது ஒன்றும், நடப்பது ஒன்றுமாகி வருத்தத்திற்கு ஆளாவீர்கள். வரவு சிறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. பொருளாதார வளர்ச்சி உண்டு. இருந்தாலும் ஏதோ ஒரு மனக்குறை இருக்கும். முன்பின் தெரியாதவர்களிடம் எச்சரிக்கை நல்லது.

### கன்னி
மனதில் தோன்றுவதை உடனுக்குடன் செய்து முடிக்க நினைப்பீர்கள். நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. எதிலும் மற்றவர்களின் அங்கீகாரம் தேவை என்றும், சுயகவுரவம் வேண்டும் என்று நினைப்பீர்கள். வரவில் குறைவிருக்காது.

### மீனம்
எடுத்த காரியங்களில் மிகுந்த தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றிகாண்பீர்கள். உங்கள் உழைப்பிற்கேற்ற லாபம் கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்ற முக்கியத்துவம் அளிப்பீர்கள்.



தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு கேட்டு நடத்தப்படும் போராட்டத்துக்கு ஆதரவாக கிளிநொச்சியில் சமத்துவம் சமூக நீதிக்கான அமைப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தது.



போதைக்கெதிரான பாடசாலையின் பலம் மிக்க ஆதரவு என்னும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்திற்குட்பட்ட ஒட்டமாவடி தேசிய பாடசாலையில் மாபெரும் பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.



தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு கேட்டு ஹட்டன் பேருந்து நிலையத்திலும் ஒரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது



வவுனியா - விபுலானந்தா கல்லூரிக்கு இதுவரை மைதானம் இல்லாத நிலையில் மைதானத்தினைப் பெற்றுத்தருமாறு கோரி பாடசாலைக்கு முன்பாக வீதியை மறித்து ஒரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## வடக்கு நோக்கி....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், பனை, தென்னை என்பவற்றில் கள்ளு உற்பத்தி செய்யப்படுவதற்கு வரி விதிக்கப்படப் போவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், பியரின் விலை குறைக்கப்பட்டது. எனவே போதையற்ற நாடு, தமிழ் சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் வகையில் மட்டுமே அமைந்திருந்தது.

புகைப்பிடித்தலுக்கு எதிரான கோசமும் வட பகுதி விவசாயிகளைப் புகையிலை உற்பத்தியை நிறுத்தி மாற்றுப் பயிர்களைப் பயிரிடவும் நிர்ப்பந்தித்திருந்தது. ஆனால் சிகரெட் விற்பனைக்கு எவ்வித தடையும் விடுவிக்கப்படவில்லை.

அதேபோன்று போதை வர்த்தக மையமாக விளங்கும் கொழும்பையும் அதன் புறநகர்ப் பகுதியையும் தவிர்த்து விட்டு போதை ஒழிப்பு வாரம் 'குடு'வைக் கண்ணால் காணக்கூடக் கிடைக்காத முல்லைத்தீவில், வடக்கில் ஆரம்பிப்பதன் உள்நோக்கம் ஏதோ இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

உண்மையில் போதைவஸ்து வர்த்தகம் ஒழிக்கப்பட வேண்டுமானால் பொலிஸ், சிறைச்சாலை, சுங்கம் போன்ற திணைக்களங்களில் அதற்கு அனுசரணையாகச் செயற்படும் அதிகாரிகள் இனங்காணப்பட்டு மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு அனுசரணையாக இருக்கும் அரசியல்வாதிகள் இனங்காணப்பட வேண்டும்.

லஞ்சம், ஊழல், அதிகார துஸ்பிரயோகம் என்பன கொடிகட்டிப் பறக்கும் ஒரு நாட்டில் எப்படி இது சாத்தியமாக முடியும்? அதைவிடுத்து வடக்கு ஒரு குற்றப்பிரதேசம் போன்ற மாயையை ஏற்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக இருக்குமாயின் அது நேர் எதிரான விளைவுகளையே ஏற்படுத்தும்.

# கலைமானும் கரடியும்



(சென்றவாரத் தொடர்ச்சி)

"கரடியே நீ பார்ப்பதற்கு அழகாக இல்லை. கருகருவென்று இருக்கும் உன்னைப் பார்த்ததும் பிள்ளைகள் பயந்தோடுவார்கள். என்னைப் பார். அழகாக வளை கொம்புகள் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. உன்னை உள் நண்பன் என்று ஏனையவர்களிடம் சொல்லிக் கொள்ள வெட்கமாக இருக்கின்றது" என்று கரடியிடம் கர்வத்தோடு கூறியது கலைமான். இதை தன் நண்பனின் வாயால் கேட்டபோது கரடிக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"நண்பா நீ கூறுவது உண்மைதான். உன் கொம்புகள் உனக்கு அழகு சேர்க்கின்றன. இப்படியொரு அழகிய நண்பன் எனக்கிருப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்" என்று பெருந்தன்மையோடு கரடி பதிலளித்தது.

ஆனால் கலைமானோ சற்றும் கர்வம் குறையாமல் "நண்பா என்னை மன்னித்து விடு. உன்னை நண்பன் என்று சொல்லிக் கொண்டு சேர்ந்து வாழ எனக்கு வெட்கமாக இருக்கின்றது. நான் தனியனாக வாழ முடிவு செய்துவிட்டேன்" என்று செருக்கோடு சொல்லிவிட்டு கலைமான் போய்விட்டது.

ஒரு நாள் புல் மேய்ச்சலுக்காக தனியனாக மான் சென்ற சமயம், பதுங்கியிருந்த சிறுத்தையொன்று துரத்தியது. அது வேகமாக ஓடித் தப்பினாலும், ஒரு மரத்தின் கிளைகளுக்குள் கொம்பு வசமாக மாட்டிக் கொண்டது.முழுப் பலத்தினையும் பிரயோகித்து,.தலையை இழுக்க, கொம்புகள் முறிந்து விட்டன. இதனால் அதன் தோற்றமே அடியோடு மாறிவிட்டது. ஏனைய மிருகங்கள் கேலிபேசிச் சிரித்தன. அசிங்கம் என்றன.

இதுபற்றி அறிந்த கரடி, மானைத் தேடி வந்தது. வெட்கத்தில் தலைகுனிந்த மானை ஆரத்தழுவியது. "நீ எனக்கு அசிங்கமான வல்ல. அதே அழகிய நண்பன்தான். வா பழையபடி ஒன்றாக வாழலாம்" என்று கூடவே அழைத்துச் சென்றது.




## ஆத்திசூடி அறிவோம்

1. **வஞ்சகம் பேசேல்**
   கபடச்(உண்மைக்கு புறம்பான, கவர்ச்சிகரமான) சொற்களை பேசாதே
2. **அழகு அலாதன செய்யேல்**
   இழிவான செயல்களை செய்யாதே
3. **இளமையில் கல்**
   இளமை பருவத்தில் இருந்தே கற்க வேண்டியவைகளை (இலக்கணத்தையும், கணிதத்தையும்) தவறாமல் கற்றுக்கொள்.
4. **அறனை மறவேல்**
   தருமத்தை எப்போதும் மறவாமல் செய்
5. **அனந்தல் ஆடேல்**
   மிகுதியாக தூங்காதே



## உழைப்பால் உயரலாம்

### சார்லி சாப்ளின்

திரையுலகிற்கு நகைச்சுவை பாத்திரத்தை அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர். இவரை திரையில் பார்க்கும் போதே துன்பங்கள் நீங்கி , உள்ளங்கள் சிரிக்குமளவில் தன் நகைச்சுவையால் அனைவரையும் கவர்ந்த ஒருவர். நடிகர், இசையமைப்பாளர், திரைக்கதை எழுத்தாளர், இயக்குனர் என பல பரிமாணங்களில் வெற்றிபெற்று இன்றும் நகைச்சுவையின் முகவரியாக காணப்படுபவர் சார்ளி சாப்ளின்.வசனங்களின்றி தன் உடல் அசைவினால் கோடிக்கணக்கான உள்ளங்களை சிரிக்க வைத்து, அனைவரது மனதிலும் இடம்பிடித்து, இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

## ஆங்கிலம் கொஞ்சம் கற்போம்

### தமிழ் மொழிப்பெயர்ப்பு பற்றிய விளக்கம்

எடுத்துக்காட்டாக, "I do a job"எனும் வாக்கியத்தை தமிழில் மொழி பெயர்ப்போமானால், "நான் ஒரு வேலை செய்கின்றேன்." என்று தான் கூறுவோம். ஆனால் நாம் இந்த ஆங்கில பாடப் பயிற்சியில் "நான் செய்கின்றேன் ஒரு வேலை." என்றே தமிழாக்கம் செய்துள்ளோம். இதற்கான காரணம் இவ்வாறுதான் ஆங்கிலத்தை தமிழில் மொழிப்பெயர்க்க வேண்டும் என்று நாம் கூறவில்லை. ஆனால் முடிந்தவரையில் ஆங்கில நடைக்கு ஏற்றாற் போல் தமிழ் விளக்கம் கொடுத்து பயிற்சி செய்தால் ஆங்கில வார்த்தைகளுக்கு மட்டுமல்லாமல், ஒவ்வொரு ஆங்கில சொற்களுக்குமான தமிழ் விளக்கத்தையும் எளிதாக விளங்கிக் கற்கலாம் என்பது எமது கருத்தாகும்.



இங்கே "do a job" எனும் ஒரு வார்த்தையை இன்றைய பாடமாக எடுத்துக்கொள்வோம். இவ்வார்த்தையின் தமிழ் அர்த்தம் "செய் ஒரு வேலை" என்பதாகும். இதை "நான் செய்கின்றேன் ஒரு வேலை, நான் செய்தேன் ஒரு வேலை, நான் செய்வேன் ஒரு வேலை" என ஒரே வார்த்தையை 73 விதமாக மாற்றி பயிற்சி செய்வதே இப்பாடத்திட்டத்தின் நோக்கமாகும். இது மிகவும் இலகுவாகவும் அதிவிரைவாகவும் ஆங்கிலம் கற்றுக்கொள்ளக் கூடிய ஓர் பயிற்சி முறையாகும்.

do a job

1. I do a Job.
நான் ஒரு வேலை செய்கிறேன் .
2. I am doing a job.
நான் ஒரு வேலை செய்துக்கொண்டிருக்கின்றேன்
3. I did a job.
நான் ஒரு வேலை செய்தேன் .
4. I didn't do a job.
நான் ஒரு வேலை செய்யவில்லை.
5. I will do a job.
நான் ஒரு வேலை செய்வேன் .
நான் ஒரு வேலை செய்கிறேன் (சற்றுப் பிறகு) .

(தொடரும்)

## துளித் துளிச் செய்திகள்

1. கண்களை திறந்துவைத்து தும்முவது சாத்தியமில்லை
2. நாம் பயன்படுத்தும் toothbrushகளை கழிவறையில் இருந்து குறைந்தது ஆறு அடி தள்ளி வைக்க வேண்டுமென பல்மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றார்கள்.
3.கரப்பான் பூச்சி தலையின்றி பத்து நாள் வரை உயிர் வாழும்
4.விரல்களில் நகங்கள் வளர்வது இயற்கை. அதில் ஆட்காட்டி விரலில் மிக நிதானமாகவும், நடுவிரலில் மிக வேகமாகவும் வளருமாம்.
5. நான்கு வயது குழந்தை நாளைக்கு நானூறு கேள்விகள் கேட்கின்றதாம்.

## அட அப்படியா?

உலகில் சுமார் பத்தாயிரம் வகையான பறவையினங்கள் இருக்கின்றன..இருக்கும் பறவையினங்களில் சுமார் 20% நெடுந்தொலைவு பறக்க வல்லவை .ஆங்கில எழுத்துக்கள் 26யும் கிளிகளால் இனங்கான முடியும்.தேனீ வழிகாட்டி (ஹனி கைட்) இது ஒரு ஆபிரிக்கப் பறவை. ஆபிரிக்க மலை வாழ் மக்கள் இந்த பறவைக்கு புரியும் படியாக சப்தம் கொடுத்தபடியே சென்றால் அந்த பறவையும். பதில் குரல் கொடுத்த படியே வழி காட்டியபடி செல்லும். தேன் கூடு இருக்கும் இடத்தை காட்டும். கிடைப்பதை பறவையோடு 50இற்கு 50 என்று பிரித்துச் சாப்பிடுவார்கள்.





# நம் பகைவன் யார்?

எத்தனையோ தவறான செயல்களைச் செய்யும் மனிதர்களைப் பற்றிப் படிக்கிறோம், கேள்விப்படுகிறோம், சந்திக்கிறோம். இவர்கள் இப்படிப் பாவம் செய்யக் காரணம் என்ன? மனிதர்கள் சக மனிதர்களுக்கு எதிராக எவ்வளவோ பாதிப்புகளை ஏற்படுத்தக் காரணம் என்ன?

இந்தக் கேள்வி அர்ஜுனனின் மனதிலும் வந்தது. பகவான் கிருஷ்ணரிடம் கேட்கிறான்.

'கிருஷ்ணா ! மனிதன் பாவம் செய்வதை நோக்கி ஏன் இழுக்கப்படுகிறான்?' (கீதை 3.36)

'அர்ஜுனா ! காமம், குரோதம் இவைகளே மனிதன் பாவம் செய்வதற்குக் காரணம். நெருப்பைப் புகை மூடுவது போலவும், கண்ணாடியை அழுக்கு மூடுவது போலவும், கருவை கர்ப்பப்பை மூடுவதுபோலவும், காமத்தாலும் கோபத்தாலும் அறிவு மறைக்கப்படுகிறது. காமம் என்பது 'அறிஞனுக்கு சத்ரு. போதுமென்ற திருப்தி இல்லாத நெருப்பு. இந்த்ரியங்கள், மனம் , புத்தி இவை காமத்தின் இருப்பிடங்கள். (கீதை - 3 - 38,39,40).

மகாகவி பாரதியும் இதைக் கூறுகிறார்.

பாரதி சொல்கிறார் . "மனம்தான் சத்ரு. வேறு நமக்குப் பகையே கிடையாது. நமக்குள்ளேயே உட்பகையாக இருந்துகொண்டு நம்மை வேரறுக்கிறது. அடுத்துக் கெடுக்கிறது. மனம் தான் பகை. அதைக் கொத்துவோம் வாருங்கள். கிழிப்போம் வாருங்கள். வேட்டையாடுவோம் வாருங்கள்."

# இயேசுபிரான் காட்டிய மனத்தாழ்மை

"நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியுடனும் இருக்கிறேன்" (மத்தேயு 11:29) என்கிறார் இயேசு பெருமான். தன் சீடர்களுக்கும் அவர் மனத்தாழ்ச்சியைக் கற்பித்தார். பூமியில் இயேசு வாழ்ந்த கடைசி இரவு அது. தனது சீடர்களுடன் இரவு விருந்து நடக்கிறது. அப்போது இயேசு எழுந்து தம் மேலங்கியைக் கழற்றி வைத்தார். ஒரு வேலைக்காரனைப் போல ஒரு சிறு துண்டை இடுப்பில் அணிந்துகொள்கிறார்.


ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, தமது சீடர்களின் பாதங்களைக் கழுவித் துடைக்க ஆரம்பிக்கிறார். அதன் பிறகே தனது மேலங்கியை அணிந்து கொள்கிறார். இயேசு ஏன் இந்தத் தாழ்மையான வேலையைச் செய்தார்?

இயேசுவே விளக்கமளிக்கிறார் பாருங்கள்: "நான் உங்களுக்கு என்ன செய்தேன் என்று புரிந்து கொண்டீர்களா? என்னை எஜமான் என்றும் போதகரே என்று அழைக்கிறீர்கள். எனக்கு உங்கள் இதயத்தில் உயர்ந்த இடத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் எனக்குத் தந்த இடத்திலிருந்து இறங்கி உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவருடைய பாதங்களை ஒருவர் கழுவ வேண்டும். நான் உங்களுக்குச் செய்தபடியே நீங்களும் செய்ய வேண்டும் என்பதற்காக உங்களுக்கு இந்த மாதிரியைக் காண்பித்தேன்" (யோவா. 13:12-15).

இப்படியொரு தாழ்மையான வேலையைச் செய்ய முன்வந்ததன் மூலம் தம்மைப் பார்த்துப் பாடம் கற்றுக்கொள்ளத் தம்முடைய சீடர்களுக்கு உதவினார். அந்தப் பாடம் அவர்களுடைய மனதில் நீங்கா இடம்பெற்றது. மனத்தாழ்மையுடன் நடந்துகொள்ள அவர்களுக்கு ஊக்கமளித்தது. மனத்தாழ்மையின் முக்கியத்துவத்தை இயேசு தனது சீடர்களுக்கு வலியுறுத்திக் காட்டியது அது முதல் தடவை அல்ல. ஒரு சமயம் தனது சீடர்களுக்கு மத்தியில் போட்டி மனப்பான்மை தலைதூக்கியபோது, இயேசு ஒரு சிறுபிள்ளையைத் தம் பக்கத்தில் நிறுத்தி, "இந்தச் சிறுபிள்ளையை என் பெயரை முன்னிட்டு ஏற்றுக்கொள்கிற எவனும் என்னை ஏற்றுக்கொள்கிறான் என்னை ஏற்றுக்கொள்கிற எவனும் என்னை அனுப்பியவரை ஏற்றுக்கொள்கிறான்.

உங்கள் எல்லோருக்குள்ளும் யார் தன்னைச் சிறியவனாக நடத்திக் கொள்கிறானோ அவனே உயர்ந்தவனாக இருப்பான்" என்று அவர்களிடம் சொன்னார் (லூக். 9:46-48).

சில சமயங்களில் தாழ்வாய்க் கருதப்படும் வேலைகளை நாம் மனப்பூர்வமாய் ஏற்றுச் செய்வதன் மூலம் இயேசு காட்டிய மனத்தாழ்மையை நம்மால் பின்பற்ற முடியுமா? நாம் யோசிக்க ஒரு நல்ல சந்தர்ப்பம் இது.



# தவறுக்கு தர்மம் ஈடாகாது

இறைவன் திருக்குர்-ஆனில் தான் படைத்த சில படைப்புகளின் மீது சத்தியம் செய்து சில செய்திகளை மனித குலத்திற்குக் கூறுகிறான். சூரியன், சந்திரன், இரவு, பகல், வானம், பூமி என இறைவன் சத்தியம் செய்யும் படைப்புகளின் எண்ணிக்கை தொடரும்.



அதில், "காலத்தின் மீது சத்தியமாக (அல்குர்ஆன் 103:1)" என்று இறைவன் நேரத்தின் மீது சத்தியம் செய்கிறான்.

இஸ்லாம் நேரத்தின் மதிப்பை மக்களுக்கு நன்கு உணர்த்துகிறது. அதிகாலை தொழுகையில் தொடங்கி மதிய லுஹர் தொழுகை, மாலையில் செய்யும் அஸர் தொழுகை, சூரியன் மறையும்போது மஃரிப் தொழுகை, இரவில் இஷா தொழுகை என ஐந்து வேளைத் தொழுகையைக் கடமையாக்கி நேரம் தவறாமையின் அவசியத்தைக் கற்றுத்தருகிறது.


ஒருநாள் மஃரிப் தொழுகைக்காக பாங்கு சொல்லப்பட்டு விட்டது. மக்கள் தொழுகைக்காக பள்ளிவாசலுக்குள் சென்று கொண்டிருந்தனர். அப்போது தொழுகைக்காக அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (ரலி) வந்தார். அந்நேரத்தில் சிரியாவிற்குச் சென்றிருந்த வியாபாரிகளும் வந்தனர்.

அவர்களோடு சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தபோது இகாமத் சொல்லப்படுகின்றது. அப்துர் ரஹ்மான் தொழுகைக்குப் போய் சேரும் முன்னர் நபிகள் தொழுகைக்காக முதல் தக்பீரை முடித்து விட்டார். சிறிது நேர தாமதத்தால் முதல் தக்பீரில் சேரமுடியாமல் போனது. தொழுகை முடித்த பின்னர் அன்றைய தினம் அப்துர் ரஹ்மான், தனது வியாபாரத்தில் கிடைத்த லாபம் அனைத்தையும் பள்ளிவாசலுக்கு வெளியே நின்ற ஏழைகளுக்கு தர்மம் செய்தார்.

இதைக் கண்ட நபிகள் (ஸல்) ஏன்? என்று கேட்டார்கள். அப்துர் ரஹ்மான், தான் தாமதமாக வந்த நிகழ்வைச் சொன்னார்.

'அப்துர் ரஹ்மானே! உன் தர்மம் சிறந்ததே. ஆனால், இதன் மூலம் நீ தவறவிட்ட முதல் தக்பீரின் நன்மையை அடையமுடியாது" என்றார்.

# இது எறும்புகளின் போர்க்களம்!



## மனிதர்களையே விஞ்சும் சிற்றுயிர்களின் போர் பண்புகள்

**மணி** நள்ளிரவு 1:30.

படைத்தளபதியும் அரசனும் ஏதோ மும்முரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசுவதை வைத்தே அந்தத் தாக்குதலை அவர்கள் எதிர்பார்க்கவில்லை என்று தெரிகிறது.

'அவர்கள் இந்த நள்ளிரவில் வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை" என்று சமாளிக்கிறார் படைத்தலைவர்.

அரசருக்கோ ஆத்திரம் தாங்கவில்லை, 'ஏன் இதற்குமுன் அவர்கள் நள்ளிரவில் தாக்கியதே இல்லையா! மிக இக்கட்டான சூழலில் அவர்கள் இதைத்தானே இதற்கு முன்னும் செய்துள்ளார்கள்"

'ஆம், அதைப்பற்றி நான் சிந்திக்கவில்லை" என்று தலைகுனிகிறார் படைத்தளபதி.

'கடந்த இரண்டு நாள்களாக நாம் அவர்களைத் தடுத்துக் கொண்டே இருக்கிறோம். நம் குடிகளைச் சாப்பிடவிடாமல் தற்காத்துள்ளோம். அடுத்து இதைத்தவிர வேறு எதைச் செய்துவிடப் போகிறார்கள். இதைக்கூடத் தெரிந்து வைத்திராத உம்மைப் படைத்தளபதியாக நியமித்ததை நினைத்து வெட்கப்படுகிறேன்" பொறிந்து தள்ளிய அரசர் யோசனை கூறினார், 'வேறுவழியில்லை. அவர்கள் பசிக்காகப் போர் புரிகிறார்கள். நாம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடுகிறோம். நம் குடிகளில் பலசாலிகளாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்துப் போருக்கு அனுப்புங்கள். என்ன ஆனாலும், நம் புற்றைக் காப்பாற்றியே ஆகவேண்டும்!"


நிலைமை கைமீறிப் போயிருந்தது. ஏற்கனவே அந்த மெகாபொனேரா எறும்புகள் புற்றுக் காவல் வீரர்களைத் தாக்கி உள்ளே நுழைந்து விட்டனர். அவர்களைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. கறையான் புற்றுக்குள் அனைவரும் இப்படிப் போர் புரியும் குணங்களோடு இருப்பதில்லை. படைவீரர்கள் தனி, உணவு தேடும், புற்றுகட்டும் அதைப் பராமரிக்கும் குடிமக்கள் தனி. ஆனால், மெகாபொனேரா எறும்புகள் அப்படியல்ல. அவர்கள் அனைவருமே போர் வீரர்கள். சொல்லப்போனால் வேட்டைக்காரர்கள். ஆக்ரோஷமாகத் தாக்கித் தன் இரையை வீழ்த்தி ருசிக்கும் இயல்புடையவை. அவற்றுக்குத் தெரிந்ததெல்லாம் போர் போர் போர்.

அப்படிப்பட்டஎதிரிகளைச் சமாளிப்பது அசாதாரணமான காரியம். அந்த அசாதாரணமான ஒன்றைத்தான் ஆபிரிக்காவின் துணை சஹாரா பகுதிகளில் வாழும் கறையான்கள் தினமும் செய்து கொண்டிருக்கின்றன. அன்றும் அப்படியொரு போர்தான். வழக்கமாக அதிகாலை 6 மணி முதல் 10 மணிக்குள் தம் தாக்குதலை முடித்துக்கொண்டு கிளம்பிவிடும். அதுவும் போதவில்லை என்றால் மாலை 3 மணி முதல் 7 மணி வரை மீண்டும் போர் நடக்கும். இந்த இரண்டு போருமே தங்களுக்குப் பின்னடைவைத் தந்தால் மட்டுமே இரவுப் போர்.

யாருக்கும் தெரியாமல் தந்திரமாகத் தாக்கத் தொடங்குவார்கள். அவர்களின் அணிவகுப்பே கறையான்களால் உடைக்க முடியாத வலிமை மிக்கதாக இருக்கும். வியூகங்கள் மனிதர்களின் போர் வியூகங்களுக்கு நிகரானவை. அப்படிப்பட்ட வலிமையான எதிரிகளை தினம் தினம் எதிர்த்தே உயிர் வாழ்கின்றன அந்தக் கறையான் கூட்டங்கள். ஒவ்வொரு கறையான் கூட்டத்திலும் லட்சக்கணக்கான குடிகள் வாழ்வார்கள். இப்படியொரு இக்கட்டான வாழ்வை வாழ்வதற்கும் தங்கள் இனமே அழிந்துபோகாமல் பாதுகாக்கவும் மூலம் ராணிக் கறையான்தான். ஆண்டுக்குச் சுமார் ஒரு கோடிக்கும் அதிகமாக முட்டையிடுபவர் அவர். அவரைப் பாதுகாத்தாக வேண்டும்.

அன்று நடந்து கொண்டிருந்த போர் வழக்கத்தைவிட அதிக சேதங்களை விளைவித்துவிட்டது. இரண்டு பக்கமும்தான். இருந்தாலும் எறும்புகள் பின்வாங்குவதாக இல்லை. அவை எப்படியாவது ராணியைக் கைப்பற்றியாக வேண்டும். அப்போதுதான் அவளிடம் இருக்கும் லட்சக்கணக்கான முட்டைகள் கிடைக்கும். அதற்குத்தான் முயன்று கொண்டிருந்தார்கள். இவர்களின் நோக்கம் தெரிந்ததும் கறையான் காலனியைச் சேர்ந்த அனைத்து ஆண்களுமே சண்டையிட வந்துவிட்டார்கள். கிட்டத்தட்டக் குடிமக்களின் துணையோடு நடந்த ஸ்டாலின்கிராட் போர் போலவே மற்றுமொரு ஆக்ரோஷமான போர் அங்கு நடந்தது. மொத்தக் கறையான்களும் போரில் இறங்கினார்கள். எறும்புகள் பக்கம் அதிக சேதம். அதிகமானோர் காயமடைந்து விட்டனர்.


தலைமைத் தளபதி உயர்வான இடத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார். திரும்பிய திசையெல்லாம் பட்டொளி வீசிக்கொண்டிருந்தது. அவருக்குப் புரிந்துவிட்டது. தன் தரப்பில்தான் சேதம் அதிகமென்று. எறும்புப் படையில் ஒருவர் காயமடைந்து வீழ்ந்தால், தன்னை நோக்கிக் கவரும் விதமாக ஒளிவீசி சிக்னல் கொடுப்பார். தங்களுள் ஒருவன் வீழ்ந்துவிட்டான் அவனைக் காப்பாற்றச் செல்ல வேண்டுமென்று மற்ற வீரர்களுக்குத் தரும் எச்சரிக்கைதான் அந்த ஒளி. அருகிலிருப்பவர்கள் வந்து உதவி செய்வார்கள். அங்கிருந்து தம்மிடத்துக்குக் கொண்டு செல்வார்கள். ஒருவேளை உதவிக்கு யாரும் வரவில்லையா! அப்படியொரு இக்கட்டான



மெகாபொனேரா - கறையான்களின் போர்க் களம்



காயமடைந்த சக வீரனைக் காவிச் செல்லும் எறும்பு வீரன்



“தன் படையில் காயமடைந்த வீரர்கள் முழுமையாகத் தப்பித்த பின்னர்தான் தளபதி கவனித்தான். அங்கு இன்னும் காயமடைந்த பலர் கிடந்தனர். அவர்கள் ஒளிவீச மாட்டார்கள். தன் உயிரைக் காப்பாற்ற முடியுமென்ற நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே ஒளிவீசி உதவி கேட்பார்கள். உயிர்போகும் அளவுக்குக் காயமடைந்தவர்கள் அப்படிச் செய்து மற்றவர்களுக்கு வீண் வேலை வைக்கமாட்டார்கள். இது அவர்களின் அறம்.”

சூழல் ஏற்பட்டால் அப்போதும் அவர்கள் வெளியிடும் அந்த ஒளிதான் உதவுகிறது. காயம் அடைந்தவர்கள் வெளியிடும் பட்டொளியை வைத்து மற்ற காயமடைந்த வீரர்கள் அனைவரும் ஒன்று சேர்கிறார்கள். அனைவரும் இணைந்தபின் ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்து ஒரே நேர்கோட்டில் தங்கள் புற்றுக்குச் செல்ல முயல்கிறார்கள். அந்தச் சமயத்தில் சண்டையிடும் எறும்புகள் அவர்களுக்கு வழிவிட்டு யாரும் தாக்காத வண்ணமும் பார்த்துக்கொள்கின்றன.

இப்படியாகத் தன் படையில் காயமடைந்த வீரர்கள் முழுமையாகத் தப்பித்த பின்னர்தான் தளபதி கவனித்தான். அங்கு இன்னும் காயமடைந்த பலர் கிடந்தனர். அவர்கள் ஒளிவீச மாட்டார்கள். தன் உயிரைக் காப்பாற்ற முடியுமென்ற நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே ஒளிவீசி உதவி கேட்பார்கள். உயிர்போகும் அளவுக்குக் காயமடைந்தவர்கள் அப்படிச் செய்து மற்றவர்களுக்கு வீண் வேலை வைக்கமாட்டார்கள். இது அவர்களின் அறம். மனிதர்களில் ஒருவருக்குச் சிகிச்சை வேண்டுமா என்பதை மருத்துவர்தான் முடிவு செய்யவேண்டும். ஆனால், இவர்களில் அப்படியே தலைகீழாக நடக்கும். தன்னால் பிழைக்க முடியுமா என்பதை அவர்கள்தான் முடிவு செய்வார்கள். ஏனென்றால் தன் உயிர் மீதான அக்கறை தன்னைவிட வேறு எவருக்கும் இருந்துவிடாது. தனக்கே பிழைக்க முடியுமென்ற நம்பிக்கை போய்விட்டால் எப்பேர்ப்பட்ட சக்தியாலும் தன்னைக் காப்பாற்ற முடியாது. அந்தத் தத்துவத்தை முழுமையாகப் புரிந்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

மரணிக்கும் தறுவாயில் இருந்தவர்களைக் கவலையோடு பார்த்துவிட்டு மற்ற வீரர்களையும் பின்வாங்குமாறு மெகா பொனேரா எறும்புப் படையின் தலைமைத் தளபதி உத்தரவிட்டான். அனைவரும் பின்வாங்கி னார்கள். தங்கள் படைவீரர்களைத் தூக்கிச் செல்ல வந்த மருத்துவர்களுக்கும் உதவினார்கள். காயமடைந்த வீரர்களைச் சுமந்துகொண்டு மருத்துவர்களும் மற்ற வீரர்களும் தங்கள் இடத்தை அடைந்தனர். அனைவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. காயமடைந்த கால்களைக் கீழ்தாடைகளாலும் முன்னங்கால்களாலும் பிடித்துக் கொண்டு காயங்களை நக்கி நக்கிச் சுத்தம் செய்தனர். அதற்குப் பின் இடைவெளி விட்டு மீண்டும் சுமார் 4 நிமிடங்களுக்குத் தொடர்ச்சியாக நக்கித் தங்கள் எச்சிலில் காயங் களை ஊறவைத்தனர். காயங்கள் சிறிது சிறிதாகக் குணமடையத் தொடங்கின. தலைமைத் தளபதி மீண்டும் மேடையில் ஏறினான்.

‘கறையான்களைச் சும்மா விடக்கூடாது. ஒருவரையும்கூட விடாமல் மொத்தமாகச் சாப்பிட்டு விடுங்கள். போருக்குச் செல் வோமா...!” என்று உரக்கக் கத்தினார். அனைத்து எறும்புகளும் உடனே கூச்சலிடத் தொடங்கின.

‘ஒன்றையும் விடக்கூடாது...” ‘மீண்டும் போர்...”

இயற்கை ஒவ்வொரு உயிருக்கும் உணவைத் தேடிக் கொள்ளவும், அதற்கு உணவாக அமையும் உயிர்களுக்குத் தங்களைத் தற்காத்து உயிர் பிழைத்திருக்கவும் தேவையான திறன்களை வழங்கியுள்ளது. அந்தப் படைப்புகளில் ஒன்றுதான் இந்த ஆபிரிக்கக் கறையான்களும் மெகாபொனேரா எறும்புகளும். ஆனால், மனிதனல்லாத மற்ற உயிர்களில் போருக்குப் பின்னர் காயம் பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதும் பேணுவதும் இந்த எறும்புகளில்தான் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

‘எறும்புகள் தங்கள் கூட்டத்தாரைக் காப்பாற்ற நுட்பமான மருத்துவ முறைகளைக் கையாள்வதும் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதும் நான் இதுவரை பார்த்திராத செயல்கள்” என்று இதைக் கண்டுபிடித்தபோது ஆச்சரியப்பட்டார் ஃபிராங்க். இதை மேலும் ஆய்வுசெய்ய ஓர் எறும்புப் புற்றுக்குள் அகச்சிவப்புக் கதிர்களில் (Infrared Rays) பதிவாகும் கமெராக்களைப் பொருத்தினார்கள். அப்போதுதான் உள்ளே என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கமுடியும்.

படைவீரர்கள் போர் முடிந்து திரும்பி வந்தார்கள். காயம்பட்டவர்களையும் உடன் தூக்கி வந்தனர். உள்ளே கொண்டு வந்ததும், அடிபட்ட இடங்களைக் கவனமாக ஆராய்ந்து புரிந்துகொள்ள முயன்றார்கள். தங்கள் உணர்கொம்புகளைப் பயன்படுத்திக் காயத்தைப் பரிசோதித்தார்கள். வேளைக்குக் குறைந்தது இரண்டு முறையாவது இந்தப் பரிசோதனை நடக்கும். இந்தப் பரிசோதனைகளைச் செய்யாமலேயே சில எறும்புகளைத் தனிமையில் விட்டுப் பார்த்தார்கள். அதில் 80 வீதம் ஒருநாள் கூடப் பிழைக்கவில்லை. அப்போதுதான் புரிந்தது எறும்புகளைச் சாகவிடாமல் பார்த்துக்கொள்ளவே அவ்வப்போது பரிசோதித்து வைத்தியம் செய்கின்றன என்பது.

முறையாக வைத்தியம் செய்தபோது பத்தில் ஒன்றுதான் உயிரிழந்தது. வைத்தியமின்றி மரணித்த வீரர்களை ஆய்வு செய்தபோது காயங்களில் ஏற்பட்ட கிருமித் தொற்றுதான் காரணமென்று தெரிந்தது. காயங்களில் தொற்று ஏற்படாமல் காப்பாற்றவே அவை எச்சிலால் அதைச் சுத்தம் செய்துகொண்டே இருக்கின்றன. மனிதர்களைவிட மற்ற உயிரினங்கள் எவ்வளவு மேலானவை என்பதைத்தான் அத்தனை ஆய்வு களும் நமக்கு உணர்த்திக்கொண்டே இருக்கின் றன. தனக்கான பாதையை, தன்னுடைய உயிரை, தன்னுடைய வாழ்நாளைத் தானேமுடிவு செய்து கொள்ள வேண்டுமென்ற பட்டறிவு நம்மைவிட அவற்றுக்கு அதிகமாகவே இருக்கிறது.

தங்களின் தேவைகளையும் உரிமைகளையும் போராடியேனும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத்தான் மீண்டும் மீண்டும் இயற்கை சொல்கிறது. அந்தப் போராட்டம் இல்லையேல் அடிமைகளாகத்தான் வாழவேண்டும். அப்படிப்பட்ட அடிமைகளைவிடப் பற்பல இழப்புகளைக் கடந்தும் எதிர்த்து நிற்கும் கறையான்களும், போராடி உயிர்த்தியாகம் செய்யத் தயங்காத மெகாபொனேரா எறும்புகளும் உயர்ந்தவைதாம். தன்னிடமுள்ள ஒற்றை உயிரையும் தனக்காக மட்டுமன்றித் தன் மொத்தக் கூட்டத்துக்காகவும் தரத் தயாராக இருக்கும் இவைதான் உண்மையான போர் வீரர்கள்.




காவிச்



வீரனின் காயத்தை சுத்தப்படுத்தும் மருத்துவர் எறும்பு



கறையான்களை வெற்றிகொண்டு முட்டைகளை சுமந்து செல்கிறார்கள்



# கடன் அட்டை மூலம் பணம் எடுக்கலாமா?

நம்மிடையே கடனட்டை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடனட்டை மூலம் பொருள்கள் வாங்கி, அந்தத் தொகையைச் சுமார் 45 நாட்களுக்குள் கட்டி விட்டால், வட்டி எதுவும் கிடையாது என்பதே இந்த அதிகரிப்புக்கான முக்கியக் காரணம். அதேநேரத்தில், தவறும் பட்சத்தில் ஆண்டுக்குச் சுமார் 35-45% வட்டி கட்ட வேண்டி வரும்.

நம்மில் பலர், கையில் பணம் இல்லாதபோது செலவுக்கு கடனட்டை மூலம் ஏ.ரி.எம். இல் பணம் எடுத்து விடுகிறார்கள். இப்படி ஏ.ரி.எம். இல் பணம் எடுத்தால் இழப்பு அதிகம் என்பது பலருக்குத் தெரியவில்லை.


கடனட்டை மூலம் ஏ.ரி.எம் இல் பணம் எடுத்தால், வட்டியில்லா காலக்கெடு எதுவும் கிடையாது. பணம் எடுத்த நொடியிலிருந்தே வட்டிக் கணக்கு ஆரம்பித்துவிடும். மேலும், பணம் எடுத்தற்கான கட்டணம் சுமார் ரூ.300 செலுத்த வேண்டும்.

இதனை ஓர் உதாரணம் மூலம் பார்த்தால் எளிதில் விளங்கும். ஒருவர் கடனட்டை மூலம் ரூ.10,000 இற்கு பொருள்களை வாங்குகிறார் என வைத்துக் கொள்வோம். இந்தத் தொகையை ஒரு மாதத்துக்குள் செலுத்துகிறார் என்றால், ரூ.10,000 மட்டுமே கட்டினால் போதும்.

இதுவே பணமாக ரூ.10,000 எடுத்தால், பணம் எடுப்பதற்கான கட்டணம் ரூ.250 மற்றும் ரூ. 10,000இற்கு ஒரு மாத வட்டி (3%) ரூ. 250 என்றால் ஒரு மாதத்தில் செலுத்தினால் சுமார் 10,500 ரூபாய் கட்ட வேண்டும். கடனட்டை மூலம் ஏ.ரி.எம் இல் பணம் எடுத்தால், அதற்கான வட்டி, கந்துவட்டி போல் ஏறிக்கொண்டே போகும். இதைச் செலுத்த தாமதித்தால், கிரெடிட் ஸ்கோர் பாதிக்கும்.'

மிக அவசரத் தேவையைத் தவிர வேறு எதற்காகவும் கடனட்டை மூலம் பணம் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

# வெற்றி மொழி: ஜோன் ப்ரான்சிஸ் ஜாக் வெல்ஷ்



ஜோன் ப்ரான்சிஸ் ஜாக் வெல்ஷ் ஒரு கெமிக்கல் இன்ஜினியர். ஜெனரல் எலெக்ட்ரிக் நிறுவனத்தின் தலைவராக 20 ஆண்டுகள் இருந்தவர். இவர் தலைவராக இருந்த காலத்தில் ஜெனரல் எலெக்ட்ரிக் நிறுவனத்தின் மதிப்பு நாலாயிரம் மடங்கு உயர்ந்தது.

10,500 டொலர்கள் சம்பளத்திற்கு வேலைக்கு சேர்ந்த இவர் சி.இ.ஓ.வாக வேலையை விட்டு வெளியேறும் போது அதற்காக கொடுக்கப்பட்ட பணம் அமெரிக்க கார்ப்பரேட் சரித்திரத்திலேயே மிகப்பெரிய தொகையான 417 மில்லியன் டொலர்கள்.

பணியாளர்களின் பங்களிப்பு குறையும் போது வெளியேற்றுவதில் ஈவிரக்கம் காட்டாதவர். 1980 இல் 4,11,000 பேர் ஜெனரல் எலெக்ட்ரிக் நிறுவனத்தில் வேலையில் இருந்தார்கள். இவர் சி.இ.ஓவான 5 வருடங்களில் அது 2,99,000 ஆக குறைந்தது.

- உங்கள் நிறுவனம் மிகப்பெரியது, ரொம்பவும் சிஸ்டமேட்டிக் என்று மற்றவர்கள் சொன்னார்கள் என்றால் உங்கள் வளர்ச்சி தடைபட்டுவிட்டது என்று அர்த்தம்.
- நிஜத்தை நிஜமாக சந்தியுங்கள். உங்கள் எண்ணத்திற்கு ஏற்பவோ, அல்லது உங்கள் விருப்பத்திற்கு ஏற்பவோ நிஜத்தை மாற்ற நினைக்காதீர்கள்.
- தொழிலில் போட்டி போடுவதற்கான தகுதிகள் உங்களுக்கு இல்லையென்றால் போட்டியில் குதிக்காதீர்கள்.
- தவறுகளும் வெற்றிகளுக்கு இணையான ஆசான்களே.
- பிசினஸில் உங்கள் விதியை நீங்கள் கட்டுப்பாட்டில் வைக்கவில்லை என்றால் அதை வேறு யாரோ கட்டுப்படுத்த ஆரம்பித்து விடுவார்கள்.
- நிர்வாகம் என்பது ஒரே நேரத்தில் குறுகிய காலத்திற்கு நிர்வகிப்பதும் நீண்ட காலத்திற்கு திட்டமிடுவதுமேயாகும்.
- நீ இதுக்கு சரிப்பட்டு வரமாட்டாய் என பணியாளர்களிடம் சொல்ல முடியாத முகாமையாளர் மிகப்பெரிய கோழை.
- மாறவேண்டிய கட்டாயம் வருவதற்கு முன்னாலேயே மாறிவிடுங்கள்
- வேலை - வாழ்க்கை இடையே சமநிலைப்படுத்துதல் (வொர்க் லைப் பேலன்ஸ்) என்று ஒரு விசயம் இல்லவே இல்லை. ஒன்று வேலை. இல்லாவிட்டால் வாழ்க்கை.

# பணம் சம்பாதிப்போமா...!

## செல்வம் சேர்க்கும் இரகசியம்



**எது சிறந்த வருமானம்?**

அப்படியானால், எது சிறந்த வருமானத்தைக் கொடுக்கும் என்கிற கேள்விக்கு என்ன பதில் என்று பார்ப்போம்.

சிறந்த வருமானம் என்பது ஒரே பரிவர்த்தனையில் எதிர்பாராத வருமானம் பெறுவதில் இல்லை. பல ஆண்டுகளுக்கு நீடித்த மற்றும் நிலையான வகையில் கிடைக்கும் வருமானமே செல்வத்தை உருவாக்குவதற்கான இரகசிய மாகும். சிறந்த வருமானம் என்பது பணவீக்கத்தைத் தாண்டி நியாயமான வருமானம் தருவதாக இருக்கும். சிறந்த வருமானத்தைக் கணக்கிட மந்திர எண் ஏதும் இருக்கிறதா?

○ ○ ○

பொருள்களின் விலைவாசி ஏற்றத்தைத்தான் பணவீக்கம் என்கிறோம். இன்று ஒரு பொருளின் விலை ரூ.100. அடுத்த ஆண்டு அந்தப் பொருளின் விலை ரூ.110 எனில், பணவீக்கம் 10% என்று அர்த்தம்.

**இரண்டு வகைப் பணவீக்கம்**

பணவீக்கத்தில் இரண்டு வகை இருக்கிறது. ஒன்று, மொத்த விலைப் பணவீக்கம். மற்றொன்று சில்லறைப் பணவீக்கம். இதில் சில்லறைப் பண வீக்கத்தை நுகர்வோர் விலைக் குறியீட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் என்றுகூட சொல்லலாம். மொத்த விலைப் பணவீக்கம் என்பது நம் நாட்டின் ஜி.டி.பி. விகிதத்தைக் கணக்கிட உதவுகிறது. அதேபோல, சில்லறை பணவீக்கம், நாட்டின் வட்டி விகிதங்களைத் தீர்மானிக்க மத்திய வங்கியால் பின்பற்றப்படும் முறையாகும். மேலும், அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்களின் சம்பளமும் இந்த சில்லறைப் பணவீக்க அடிப்படையில்தான் உயர்த்தப்படும்.

**செலவைச் சமாளிக்கும் வருமானம்**


43 வயதாகும் செந்தில், தனியார் நிறுவன மொன்றில் வேலை பார்க்கிறார். இருபது வருடங்களுக்கு முன் அதாவது, 1998 ஆம் ஆண்டில் செந்தில் மாதம் 8,000 ரூபாய் மாதச் சம்பளம் வாங்கினார். அந்தச் சமயத்தில் அவரது குடும்பச் செலவு மாதம் 5,000 ரூபாயாக இருந்தது. அவரது ஊதிய உயர்வு ஆண்டுக்குச் சராசரியாக 12 வீதமாக இருந்த நிலையில், பணவீக்கம் ஆண்டுக்கு 6.5 வீதமாகக் காணப்பட்டது.

இன்று அவரது மாத ஊதியம் (கையில் கிடைப்பது) 77,000 ரூபாயாக அதிகரித்திருக்கிறது. அவருடைய அடிப்படைச் செலவுகள் மாதம் ரூ.17,000 ஆகவுள்ளது. ஆனால், வாழ்க்கைமுறை மாறியதால் காரணமாக, ப்ரிட்ஜ், வோஷிங்மெஷின், ஏசி, செல்போன், கேட்ஜெட்ஸ், சுற்றுலா செல்வது என விடயங்களுக்காக அவர் நிறைய செலவிட வேண்டியுள்ளதால், தற்போது அவரின் மாத செலவு 50,000 ரூபாயாக அதிகரித்துள்ளது.

செந்திலின் வருமானம், பணவீக்கம் உயர்ந்த அளவுக்கு உயராமல் இருந்தால், அவரால் அவரது அன்றாடத் தேவைகளுக்கான பொருள்களைக்கூட வாங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். அதனால்தான், ஒவ்வோர் ஆண்டும் பணவீக்கத்துக்கேற்ப ஒருவரது வருமானம் அதிகரிக்க வேண்டும் என்பது முக்கியம். ஆனால், செந்திலின் சேமிப்பு வீதம், 20 ஆண்டுகளில் சராசரியாக 33% என்ற அளவில் அப்படியே இருப்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. (இன்னும் சம்பாதிப்போம்)

# தங்க மகன் கக்கும் நஞ்சு

இதோ வருகிறார் வேட்டைக்காரர். கையில் ஒரு ஊதுகுழல். ஊதுகுழல் முனையில் விஷம் தோய்த்த சிறு ஈட்டி. மரத்திலிருக்கும் குரங்கைக் குறிவைத்து, ஊதுகுழல் ஊதப்பட, அம்பு தாக்கி, குரங்கு தொப்பென்று கீழே விழும். அன்றையபொழுதுக்கு குரங்கு உணவாகி விடும். 1825இல்



கொலம்பிய மழைக்காட்டில் நேரில் கண்டதை இப்படித்தான் ஒருவர் பதிவு செய்திருக்கிறார். இங்கு வாழ்ந்த பிக்மி என்ற குள்ள காட்டுவாசிகள் குரங்கு இறைச்சியை விரும்பி உண்பவர்கள். இப்போது இவர்கள் அருகிவிட்டார்கள் - முழுமையாக அழிந்து போயும் இருக்கலாம். இங்கே நாம் பேசப்போவது இவர்கள் உபயோகித்த நஞ்சு எங்கு கிடைத்தது என்பதுதான்!

இந்த மழைக்காடுகளில் காணப்படும் தங்க நிறத் தவளையின் மேற்தோலில்தான் இந்தக் கொடிய விஷம் இருக்கின்றது. அம்பின் முனையை ஒரு தடவை இத்தவளையின் மேற்தோலில் தேய்த்தால் போதுமாம், அது பொல்லாத விஷ ஆயுதமாக விஸ்வரூபம் எடுத்துவிடும். இத்தனைக்கும் இந்தத் தவளையின் அதிக பட்சி நீளமே 6 செ.மீற்றர்தானாம். சில 1.5 செ.மீற்றர் மட்டுமே நீளம் கொண்டவையாம்.

தங்க விஷத் தவளைகள் என்று அழைக்கப்படும் இந்தச் சிறு தவளை. உலகில் மிக அதிகமான விஷத்தை தன் உடலில் கொண்ட இனமாம். நன்கு வளர்ந்த பத்து ஆண்களைக் கொல்ல, ஒரு தவளையின் விஷம் போதுமானது என்கிறார்கள். கொலம்பியாவின் பசுபிக் கரையோர மழைக்காடுகளில் இவை தாராளமாகக் காணப்படுகின்றன. தகதகவென்று மின்னும் 100க்கு மேற்பட்ட இன விஷத் தவளைகள் இருப்பினும் இந்தத் தங்க மகன்தான் அளவில் பெரியவராம்.

இன்றைய மருத்துவ உலகம் இதன் நஞ்சை ஒரு தலைசிறந்த வலிபோக்கியாக மாற்றுவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பது கொசுறுப் புதினம்..

**சில மனிதர்களின் மனம்போல இதற்கும் உடம்பெல்லாம் விஷம்...**



# வெடவெடக்கும் குளிரில் மரதன்

மரதன் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள உங்களுக்கு ஆர்வம் இருக்கலாம். ஆனால் ஜாக்கிரதை உலகிலேயே மிகவும் குளிரான ஓட்டப் பந்தயம் இது!

நடக்கும் இடம் சைபீரியா. இங்குள்ள ஒய்ம்யக்கன் என்ற குக்கிராமம் ஒன்றில்தான் இந்தப் போட்டி முதற் தடவையாக இடம்பெற்றது. வைர அகழ்வுக்கு பிரபல்யமான யக்குட்டியா பிராந்தியத்திலேயே இக் கிராமமும் இருக்கின்றது. போட்டி ஆரம்பத்தில் வெப்ப நிலை (குளிர் நிலை) மைனஸ் 52 பாகை!21 வயதிலிருந்து 71 வயது வரை போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். உறைய வைக்கும் குளிரில் இடம்பெற்ற ஓட்டப்போட்டியை கண்டு களிக்க, அவுஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா, தாய்வாய் ஆகிய இடங்களிலிருந்து பார்வையாளர்கள் வந்திருந்தனர் என "சைபீரியா ரைம்ஸ்" செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தப் போட்டியில், வயதாளியும்(71) அனுபவசாலியுமான யேகோர் பெர்மியாக்கொவ் ஒன்பதரை மைல் தூரத்தை இரண்டரை மணி நேரத்திலும், 21 வயதான ஒலெசோவ் 6.2 மைல் தூரத்தை ஒரு மணி 8 நிமிடங்களிலும், கிராமத் தலைவரான பெஸ்டரெவ் என்பவர் 24 மைல்களை 3 மணி 58நிமிடங்களிலும் ஓடி முடித்துள்ளனர். இதில் சோகம் என்னவென்றால், எவருமே மரதன் தூரமான 26.219 மைல் தூரத்தை ஓடி முடிக்கவில்லை என்பதுதான்!.

**விறைத்த மனிதர்கள் இவர்கள்...**



# கர்ஜனை நடுவே தூக்கம்?

உங்களில் எத்தனை பேருக்கு , ஒரு மீற்றர் தூரத்தில் சிங்கங்களை சுதந்திரமாக உலாவவிட்டு(நாலாபக்கமும் அடைக்கப்பட்ட இடத்தில்தான்), நிம்மதியாகக் குறட்டைவிட்டுத் தூங்க முடியும்?

முடியுமென்கிறார் சுஸான் ஸ்கொட் என்ற 50 வயதுப் பெண்மணி. இவர் தங்கியிருக்கும் வீட்டின் முன்புறத்தில் இறைச்சியை நெருப்பில் வாட்டிச் சாப்பிடும் வாடையில் பலமாகக் கர்ஜிப்பதைக் கேட்க முடியும் என்கிறார் இவர்.

இவர் தங்கியுள்ள இருப்பிடத்தின் தடுப்பு வேலியருகே ஒரு மீற்றர் தூரத்தில் இன்னொரு தடுப்பு வேலிக்குள் 77 சிங்கங்கள் இருக்கின்றன. தென்னாபிரிக்க வன விலங்கு பாதுகாப்பு அமைப்பு, மூன்று படுக்கையறைகள் கொண்ட இந்த இருப்பிடத்தை ஓர் இரவுக்கு சுமாராக 7000 ரூபாய் என்ற கணக்கில் வாடகைக்கு விடுகின்றது. நீங்களும் இங்கு தங்க முடியும்.

சுதந்திரமாக சிங்கங்கள் எப்படிச் செயற்படுகின்றன என்பதை இந்த வேலியூடாகப் பார்க்க முடியும். மேலதிக பாதுகாப்பாக சிங்கங்கள் அடைக்கப்பட்டுள்ள பகுதிக்குள், மின்சார வேலிகளும் எழுப்பப்பட்டுள்ளன. இந்தச் சிங்கங்களின் கர்ஜனை பற்றிச் சில வரிகள் தரவேண்டும். பூனைக் குடும்பத்தில் மிகப் பலத்த ஒலிக்குச் சொந்தக்காரர் சிங்கம்தான். நன்கு வளர்ந்த ஒரு சிங்கத்தின் கர்ஜனை 5 மைல் தூரத்திற்குக் கேட்கும்.

**உங்களுக்கும் தில் இருந்தால் சில இரவுகள் இங்கே தங்கி தூங்க**

# 11,567 தாக்குதல்கள்

இயற்கை என்பது ஓர் அசுர பலவான்! இதன் இராட்சத பலத்தோடு மல்லுக்கட்ட மனிதரால் முடிவதில்லை. சில விநாடிகள், சில நிமிடங்கள் என்று சொற்ப நேரத்தில் பேரழிவை உண்டு பண்ணுவதில், இயற்கையைத் தோற்கடிக்க இவ்வுலகில் யார்தான் உளர்?

இந்தோனேஷியாவில் 2018ஆம் ஆண்டுக்கான காலநிலை அறிக்கை வெளியாகி இருக்கின்றது. கடந்த ஆண்டு மட்டும் அதாவது கடந்த 12 மாதங்களில் 11,557 தடவைகள் நாடு பூகம்பத் தாக்குதல்களுக்கு உள்ளாகி இருக்கிறதாம். அவர்களது பூமி அதிர்ச்சிக் கணக்கைப் பார்க்கும்போது நமக்குமல்லவா அதிர்ச்சி வருகின்றது? கடந்த காலங்களில் சராசரி ஆண்டுக்கு 6000 என்ற கணக்கிலேயே பூகம்பங்கள் ஏற்பட்டு வந்தன. ஆனால் கடந்த ஆண்டில் எகிறிக் குதித்துள்ள இத் தொகை, பலரையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கி இருக்கின்றது.

இந்த நாட்டின் பூகோள அமைப்பே இதன் எதிரி! குதிரை லாடத்தின் வடிவில் உள்ள தீ வளையத்திற்குள் உட்கார்ந்து கொண்டிருக்கின்றது இந்தத் தெற்காசிய நாடு ! பூமிக்குஅடியிலுள்ள கண்டத் தகடுகள் எப்பொழுதுமே ஒன்றோடு ஒன்று உரசிக் கொண்டிருக்கின்றன. இந்த உரசல் தடைப்பட்டு ஒரு கணம் நிற்கும் தருணத்தில்தான், பேரழுத்தம் பெரும் பூகம்பங்களாகத் தலையெடுக்கின்றன. மொத்தம் 17,000 சிறுசிறு தீவுகளைக் கொண்ட இந்த நாட்டின், தலைக்கு மேல் என்றுமே கத்தி தொங்கிக்கொண்டுதான் இருக்கின்றது.

**மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்...**



# வடக்கு நோக்கி நகரும் போதைப் புயல்

■ யோகநாராயணன்



முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் ஜனாதிபதி போதை ஒழிப்பு வாரத்தை ஆரம்பித்து உரையாற்றும்போது போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட 108 குற்றவாளிகள் அனைவரினதும் குற்றங்கள், விசாரணைகள் தொடர்பான அனைத்து ஆவணங்களும் காணாமல் போய் விட்டன எனவும் எனினும் தான் அது தொடர்பான முயற்சிகளை கைவிடப் போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

ஒரு நாட்டின் அரச தலைவர் பகிரங்கமாக இப்படி ஒரு அறிவிப்பை வெளியிடும்போது நாட்டில் காணப்படும் அரசாங்கத்தைவிட இன்னொரு அரசுக் கட்டமைப்பு வலிமையாக இயங்கி வருகிறதா என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாது. இந்த ஆவணங்களுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் யார்?, இவை அவரிடமிருந்து எவருக்குக் கைமாறும்போது, எங்கிருந்து காணாமற் போயின? என்பவை பற்றி ஏன் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

போதைவஸ்து ஒழிப்புப் பிரிவு வெளியிட்ட 2018 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில், அந்த ஆண்டில் நாட்டில் போதைப் பொருட்கள் தொடர்பாக 95,970 பேர் கைது செய்யப்பட்டதாகத் தகவல் வெளியிட்டிருந்தது. இது ஒரு சாதாரண தொகையல்ல ஏறத்தாழ 10 பெரிய தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களின் தொகையை விட அதிகமானதாகும். அதாவது இவ்வளவு பெரும்தொகையினர் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றால், இலங்கையில் மிக அதிகளவில் பணம் புரளும் தொழில்துறையில் ஒன்றாகப் போதைவஸ்து வர்த்தகம் வளர்ச்சி பெற்று நிலைகொண்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அதேவேளையில் இவ்வளவு பெருந்தொகை போதைப் பொருட்களை நாட்டுக்குள் கொண்டுவர நாட்டை விட்டு எவ்வளவு ஆயிரம் கோடிகள் அந்நியச் செலாவணி சட்டவிரோதமான வழிகளில் வெளியே கொண்டு செல்லப்பட்டிருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இத்தொகை நாட்டுக்குள் கட்டுப்படுத்தப்படுமானால் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையைக் கணிசமாகக் கட்டுப்படுத்த முடியும்.

இது அரசாங்கத்தின் கையாலாகத்தனம் மட்டுமல்ல! சிறைச்சாலைத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், சுங்கத் திணைக்களம் போன்றவற்றின் அதிகார பீடங்களில் பணியாற்றும் அதிகாரிகள் சிலரின் துணையின்றி இவ்வளவு பெரியளவில் இவ்வர்த்தகம் நடைபெற முடியாது.

அண்மையில் போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஒருவர் விசாரணை செய்யப்பட்டபோது அவர்கள் அனுராதபுரம் உல்லாச விடுதி ஒன்றில் கராத்தே வீரர் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவரின் முகவராகவே, அவரின் வழிகாட்டலில் போதைவஸ்து வியாபாரத்தை நடத்துவதாகத் தெரிவித்திருந்தார். அடுத்தடுத்த நாளில் ஒன்றரைக் கோடி பெறுமதியான 113 கிலோ ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட மூவர் தாம் டுபாயில் தலைமறைவாக இருக்கும் மஹந்தர மதுசவின் தலைமையிலேயே போதை வர்த்தகத்தில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவித்தனர்.

ஏற்கனவே போதைவஸ்து வர்த்தகம் மட்டுமின்றி அவை தொடர்பான படுகொலைகள் என்பன உட்படப் பலவிதமான குற்றச்செயல்கள் சிறைச்சாலைகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தொலைத்தொடர்பு மூலம் வழிநடத்தப்படுகின்றன என்ற தகவல்கள் வெளிவந்தன.

அண்மையில் பேருவளைக் கடல் பகுதியில் 228 கோடி பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. அது மட்டுமின்றி கொழும்பில் வைத்து 360 கோடி பெறுமதியான ஹெரோயினுடன் பங்களாதேஸ் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார். இது, இதுவரை கைப்பற்றப்பட்ட ஹெரோயின் பெறுமதியில் மூன்றில் ஒரு பகுதி எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றைவிட நாளாந்தம் சிறு போதை வியாபாரிகளும் கண்டுபிடிக்கப்படுகின்றனர். இவ்வர்த்தகப் போட்டி தொடர்பான கொலைகளும் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

அதேவேளையில், போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பாக மரணதண்டனை விதிக்கப்பட்ட 108 குற்றவாளிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் தொலைபேசிகள் மூலம் வெளியில் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதுதான் வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இப்படியாகக் கைதுகள், மரண தண்டனைகள் என்பன போதைவஸ்து வர்த்தகத்தை அச்சுறுத்தவோ, பாதிப்பை ஏற்படுத்தவோ இல்லை என்பதைப் புரிந்து கொள்ளமுடிகிறது. ஏனெனில் மரண தண்டனை தொடர்பான ஆவணங்கள் காணாமல் போகுமளவுக்கு போதை வர்த்தகச் சக்கரவர்த்திகளின் செல்வாக்கு அரச திணைக்களங்களுக்குள் பலமாக நிலைகொண்டுள்ளன என்பது தெளிவாகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்த ஆரம்பத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பை பெருவிரைவில் ஆசியாவின் பொருளாதார மையமாக மாற்றப் போவதாகச் சூளுரைத்தார். ஆனால் அதை ஒரு பகுதிகூட அவரால் நிறைவேற்ற முடியவில்லை. எனினும் தற்சமயம் கொழும்பு ஆசியாவின் மிகப்பெரும் போதைப்பொருள் வியாபார மையமாக மாறிவிட்டது.

இப்படியான ஒரு நிலையில்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வட பகுதியின் முல்லைத்தீவில் வைத்துப் போதை ஒழிப்பு வாரத்தை ஆரம்பித்துள்ளார். அதுமட்டுமின்றி 21 ஆம் நாள் தொட்டு 25 ஆம் நாள் வரை வடக்கிலுள்ள ஒன்றரை இலட்சம் மாணவர்களையும் பாடசாலைகளில் காலையில் போதைப் பாவனைக்கு எதிரான உறுதிமொழி எடுக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார். வடக்கில் இதுவரை 'குடு' என அழைக்கப்படும் ஹெரோயினை யாரும் பாவித்ததாகவோ, வர்த்தகம் செய்ததாகவோ, கைது செய்யப்பட்டதாகவோ எதுவித தகவலும் இல்லை. பாடசாலைகளுக்கு முன்னால் போதைப் பாக்கு விற்பதாகக் கூறினார்கள். ஆனால் அப்படியான வியாபாரிகள் யாரும் கைது செய்யப்படவில்லை. வாள்வெட்டு வீரர்கள் போதைவஸ்து பாவித்துவிட்டே அடாவடிகளில் ஈடுபடுகின்றனர் எனச் சொன்னார்கள் அது இன்னமும் ஆதாரப்படுத்தப்படவில்லை. அவர்கள் இதுவரை கொலை எதையும் செய்ததாகவும் இல்லை. கேரள கஞ்சா கடல் மூலம் கடத்தப்பட்டு தென்னிலங்கைக்கு கொண்டுசெல்லும்போது மட்டும் பிடிபட்டுள்ளது. ஆனால் அது இங்கு பாவிக்கப்படுவதாகத் தெரியவில்லை.

அப்படியானால் ஏன் போதை ஒழிப்பு வாரம் வடக்கை மையமாக வைத்து நடத்தப்படுகின்றது?

ஏற்கனவே ஜனாதிபதியால் போதையற்ற நாடு, புகைப்பிடிக்காத மக்கள் என்ற கோசம் பிரகடனம் செய்யப்பட்டது. இது சிங்கள பகுதிகளில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இன்றைய நிலைக்கு வளர்ச்சியடைந்தே காணப்படுகின்றது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# கொலுசு



ஆரம்ப காலத்தில் நாம் எல்லோரும் கால்சங்கிலி எனப்படும் கொலுசு அணிந்தோம். பின்னர் இடைப்பட்ட காலத்தில் அது பழங்கால பழக்கம் என்று கைவிடப்பட்டது. தற்போது அது மீண்டும் வழக்கத்திற்கு வந்துள்ளது. அதிலும் ஒற்றைக் காலில் கொலுசு அணிவதுதான் ஃபஷன். பொதுவாக எல்லா நகைகளையும் தங்கத்தில் அணியும் நாம், காலில் அணியும் நகைகளை வெள்ளியில் தான் அணிகிறோம்.

தங்கத்தில் மகாலட்சுமி இருப்பதால் நாம் காலில் அணியும் நகைகளைத் தங்கத்தில் அணிவதில்லை. அத்துடன் வெள்ளி நகைகள் நம் ஆயுளை விருத்தி செய்யக் கூடியவை. நம் உடல் சூட்டை அகற்றி குளிர்ச்சியாக்கி சருமத்தை ஆரோக்கியமாக்கும். சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்கு கொலுசு அணிவித்து விடுகின்றோம். குழந்தைக்கு நடக்கும்போது எப்போதும் சங்கீதம் கேட்க வேண்டும் என்பதாலும் குடும்பத்தினருக்கு குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிப்பதற்கும் கொலுசு அணிவிக்கப்படுகிறது.

உணர்ச்சி வசப்படுதல் என்பது எப்பொழுதும் ஆண்களை விட பெண்களுக்கு அதிகம். வெள்ளிக்கொலுசு குதிகால் நரம்பினை தொட்டுகொண்டிருப்பதால் குதிகால் பின் நரம்பின் வழியாக மூளைக்கு செல்லும் உணர்சிகளைக் குறைத்து கட்டுப்படுத்துகிறது. மேலும், கொலுசு பெண்களின் இடுப்பு பகுதியை வலுப்படுத்துகிறது.



# உடுக்கு/உடுக்கை

உடுக்கு அல்லது உடுக்கை என்பது தமிழர் பாரம்பரிய இசைக் கருவிகளில் ஒன்றாகும். கிராமப்புற கோயில்களிலும் சமயச் சடங்குகளிலும் இது ஒலிக்கப்பெறும். தோல் இசைக்கருவியான இதைக் கைகளைக் கொண்டு இசைக்கலாம். இசைத்துக் கொண்டிருக்கும் போதே இதன் சுருதியை மாற்றியமைக்கக்கூடியதாக இருப்பது இதன் சிறப்பியல்பாகும்.

உலோகத்தால் அல்லது மரத்தால் செய்யப்பட்ட இரு பக்கங்களும் விரிந்து இடை சிறுத்துப் பருத்திருப்பதால் இதை 'இடை சுருங்கு பறை" என்றும் துடி என்றும் அழைப்பர். பொதுவாக இதிலிருந்து ஒலியெழுப்புதலை "உடுக்குத்தெறித்தல்" என்றே அழைக்கப்படுகின்றது. சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவன் கையிலும் இந்த உடுக்கு காணப்பெறுகிறது. இதிலிருந்து இது ஒரு பழைமைவாய்ந்த இசைக்கருவியென்பது புலனாகிறது.

# சொதி



சொதி அல்லது பாற்சொதி என அழைக்கப்படும் உணவு, தேங்காய்ப்பால் அல்லது பசும்பாலில் வெங்காயம், தக்காளி, உப்பு, புளி, கறிவேப்பிலை போன்ற சுவைபொருட்கள் சேர்த்து கொதிக்க வைத்துச் செய்யப்படும் ஒரு நீர் உணவு.

இது பொதுவாக இலங்கையிலும், ஈழத்தவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இடியப்பம், பிட்டு, சோறு போன்றவற்றுடன் சேர்த்து உண்ணப்படும் உணவாகும்.

இது ஒரு நீர் உணவாக என்பதால் குழந்தைகளும் சிறுவர்களும் இதனை விரும்பி உண்பது வழக்கம். திருமண விருந்தில் சொதி

தமிழ்நாட்டில் முக்கியமாக திருநெல்வேலி மாவட்டத்தில் சில பிரிவினரின் திருமண விருந்தில் சொதி, பரிமாறப்படுகிறது. திருமண நிகழ்விற்கு அடுத்த நாள் மணமகனின் வீட்டார் சார்பில் நிகழ்த்தப்படும் மறுவீட்டு விருந்தில் சொதிக் குழம்பு பரிமாறப்படும்.

**வகைகள்**

- பால் சொதி
- மீன் சொதி
- இறால் சொதி
- தக்காளிச் சொதி
- அகத்திக்கீரைச் சொதி
- மாங்காய்ச் சொதி

# கதிரைமலைப் பள்ளு

தமிழ் சிற்றிலக்கிய வடிவங்களுள் ஒன்று பள்ளு பிரபந்தமாகும். வேளாண்மைக் குடிகளான பள்ளர்களின் வாழ்வையே பள்ளு பாடியது. ஈழத்தின் கதிரைமலைப் பள்ளுவைப் பின்பற்றியே தமிழகத்தில் பள்ளுப் பிரபந்தங்கள் தோன்றியது என்பர்.

அவ்வகையில் தமிழிலக்கிய வரலாற்றில் முதல் தோன்றிய பள்ளுப் பிரபந்தம் ஈழத்தின் கதிரைமலைப் பள்ளு ஆகும். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பரராஜசேகரன் மன்னனின் காலத்தில் கி.பி. 1478 - 1519 ஆண்டுகளுக்குள் இந்நூல்



தோன்றியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கதிரைமலைப் பள்ளை எழுதியவர் பெயர் தெரியாத போதும், பரராசசேகரம் எனும் நூலில் புகழப்படும் தென்கதிரவேலர் என்பவரே பாடியிருக்கக்கூடும் என்ற சந்தேகம் உள்ளது. மொத்தம் 130 செய்யுள்களைக் கொண்ட இந்த நூலில் இடைச்செருகல்களும் உண்டு என்பர்.

# சேவரக்கால்



பண்டைய தமிழர்கள் உணவு உண்பதற்குப் பயன்படுத்தும் வட்டுவத்தை வைப்பதற்காக சேவரக்காலைப் பயன்படுத்தினர்.

இது பொதுவாக வெண்கலம், பித்தளையால் உருவாக்கப் பட்டிருக்கும். சேவரக்காலில் நுணுக்க வேலைப்பாடுகள் நிறைந்த சேவரக்கால்களும் புழக்கத்தில் இருந்தன.

முதுசொம் மீட்போம்

# சிறுவர் துஷ்பிரயோகம்
## கோட்பாட்டியல் பார்வை



பத்மநாதன் தயாபரன்
(B.Sc, PGDE)
ஆசிரியர் : யா/நெல்லியடி மத்திய கல்லூரி

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் முதலீடு, மூலவளம், மூளை வளம் என்று பலவாறாகக் கணித்துக் கூறப்படும் சிறுவர்கள் சமூகத்தன் கலங்கரை விளக்குகளாவார். இவர்களே நாட்டைக் கட்டியெழுப்பப் போகும் சிற்பிகள். இந்தச் சிறுவர்களது உணர்வுகள் மிருதுவானவை -அழகானவை - அற்புதமானவை. இவர்களது கற்பனைகள் எல்லாம் மிக நுணுக்கமாக உரியவர்களால் அணுகப்பட வேண்டியவை. ஒரு பண்பாடான சமூகத்தின் கண்களாக மிகவும் கவனத்தோடு மதிக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டியவர்கள் சிறுவர்களே. சிறுவர்களின் வாழ்க்கை நீரோட்டத்தில் பங்கு கொள்பவர்களாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள், வைத்தியர்கள் எனப் பல்வேறு சமூகத்தவர்களும் இவர்களில் உடல், உள வளர்ச்சியில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பங்கெடுத்துக் கொள்கின்றனர். அது மட்டுமன்றி சமூகத்தில் வாழும் அனைவருமே சிறுவர்களது வளர்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியவர்களே.

சிறுவர்கள் யாரெனின் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின் படி ஒரு சமூகத்திலுள்ள 18 வயதிற்கு குறைந்த ஆண், பெண் இருபாலாருமே. நாளை பூத்துக் குலுங்க வேண்டிய மலர்களாகிய இவர்களை இன்றே மொட்டோடு கருக்கிவிடும் சந்தர்ப்பங்கள் இன்றைய சமூகத்தில் அதிகரித்துள்ளன. சிறுவர்களை சீரழிக்கும் நிகழ்வுகள் உலகெங்கினும் நடந்து வருகின்றன. ஆயினும் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. யுனிசெவ் (Unicef) இன் அறிக்கையின்படி உலகெங்கிலும் இன்று 240 மில்லியன் அளவிலான சிறுவர்கள் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இது உண்மையில் அனைவரையும் கவலைக்குள்ளாக்கும் ஓர் செய்தி.

**இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம்**

இலங்கையில் இனப்பிரச்சினை, பல்வேறு சமூகப் பிரச்சினைகள் தலைவிரித்தாடும் நிலையில் சிறுவர் துஷ்பிரயோகமும் ஒரு முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இங்கு சில தசாப்தங்களுக்கு முன்னர் அதாவது உள்நாட்டுப் போர் தோன்ற முன்னர் சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகள் இல்லையென்று கூறும் அளவுக்கு மிகக்குறைவாகவே காணப்பட்டது. சமூக, கலாசார பண்பாட்டுப் பாரம்பரிய மதக் கொள்கைகள் அந்தக் காலங்களில் மிக இறுக்கமாக பின்பற்றப் பட்டன. இதனால் இவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்கள் மிகக்குறைவாகக் காணப்பட்டன.

சிறுவர்கள் மீதான உடல் ரீதியான துன்புறுத்தல்கள் 1965 ஆம் ஆண்டு வரை இனங்காணப் படவில்லை. சிறுவர் துஷ்பிரயோகத்திற்குப் பின்னரான காலப் பகுதியிலேயே ஊர்ஜிதமாகி உள்ளது. சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களும் அதன் பின்னரான காலப்பகுதிகளிலேயே இனங்காணப்பட்டன. 1980ஆம் ஆண்டுகளின் முடிவிலும், 90 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் குருதி ஒழுக்கு பிரச்சினைகளுடன் பெண்பிள்ளைகள் வைத்திய பரிசோதனைக்கு கொண்டுவரப் பட்டபோது அவர்கள் பருவமடைந்தவர்களாகவும், அட்டைக் கடிக்கு இலக்கானவர்களாகவும் தான் கணிக்கப்பட்டார்கள்.

இன்றைய உலகின் கவனயீனமும், குடும்ப வட்டாரங்களினால் பேணப்படும் அந்தரங்கப் பற்றுறுதியும் எண்ணற்ற சிறுவர் துஷ்பிரயோகங்களை ஆழப் புதைத்து விடுகின்றன. இவ்வாறான பிரச்சினைகளை நாம் கடலில் மிதக்கும் பனிப்பாறைக்கு ஒப்பிடலாம். ஏனெனில் இந்தப் பிரச்சினையால் நுனிப்பாகம் மட்டுமே எம் கண்களுக்கு புலப்படும் ஏனைய இதர பாகங்கள் கண்ணுக்குப் புலப்படாமல் அப்படியே மறைந்து விடுகின்றன. அத்துடன் பாதிப்புக்குள்ளாவோரின் வயது, பராயம், வலுவற்ற தன்மை, அச்சுறுத்தல், பண்பாட்டு மரபுகள், இரகசியத்தன்மை, நிருபணச்சிக்கல் காரணமாக இந்தப் பிரச்சினையை கையாள்வதிலும் வெளிக்கொணர்வதிலும் பல்வேறு தடைகள் காணப்படுகின்றன.

**சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்படும் முறைகள்**

இன்றைய சிறுவர்கள் பல்வேறு பரிணாம வளர்ச்சிக்கட்டங்களின் அடிப்படையில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். இவற்றை பின்வருமாறு நோக்கலாம். உடல் ரீதியான துன்புறுத்தல்கள், உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள், சிறுவர்களை வேலைக்கமர்த்தல், பாலியல் துன்புறுத்தல்கள், போஷணை மருத்துவ சேவைகள் வழங்கப்படாமை, படைகளில் சேர்த்தலும் போருக்குப் பயன்படுத்தலும், திட்டமிட்ட நஞ்சூட்டல், தேவையற்ற மருந்தூட்டல்,

**உடல் ரீதியான துன்புறுத்தல்கள்**

சிறுவர்களை சுரண்டி வாழும் பழக்கம் இன்று எல்லா நாடுகளிலுமே மேலோங்கிக் காணப் படுகின்றன. ஐ.நா. சபையின் இன்னொரு அதிர்ச்சியான தகவலொன்று இவ்வாறு கூறுகிறது. உலகில் 171 மில்லியன் சிறுவர்கள் உடலுக்கு ஊறு விளைவிக்கும் ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இவர்கள் ஆபத்தான இயந்திரங்கள், நச்சுச் செறிவு கொண்ட இரசாயனப் பொருட்களைக் கையாள்தல், வீடுகளில் ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்தப்படுவதுடன், அடித்தல், தீயினால் சுடுதல், காயப்படுத்தல் போன்ற சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். வீங்கிய விரல்கள் கொண்டவர்களாகவும், வலிக்கும் நுரையீரல்களைத் தாங்கியவர்களாகவும், கூனிய முதுகு கொண்டவர்களாகவும் இவர்கள் அனுபவிக்கும் துன்பச் சுமைகள் ஏராளம்.

அதுமட்டுமல்ல, போர் மற்றும் வேறு அனர்த்தங்களினால் அநாதைகளாக்கப்படும் இன்றைய சிறுவர்கள் - கொடுமைக்கார அரக்கர்களின் பட்டியலில் சிக்கி வாழவேண்டி ஏற்படுவதால் அவர்கள் பாடசாலை செல்லவோ, விளையாடவோ தகுதியற்றவர்களாகி விடுகின்றனர். இலங்கையில் உடல் ரீதியான துன்புறுத்தல்கள், தந்தை தொழிலின்மை, மதுபான பாவனை, அதிகளவான கண்டிப்பு மனோநிலை போன்ற காரணங்களால் நிலவுவதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

**உளவியல் துன்புறுத்தல்கள்**

சிறுவர்களது உள்ளமானது நுண்ணிய தன்மையுடையது. சமூகத்தில் இசைவாக்கமடையா, பழக்கமடையாத உள்ளம் எதனையும் அறியாது பயம், அச்சம், கவலை, ஆசை போன்றன இவர்களிடம் மேலோங்கிக் காணப்படும். இந்த உலகை அறிந்து கொள்ளாத பிஞ்சுகள் - படிப்பறிவற்ற, இரக்கமற்ற பெற்றோர்களினால் புறக்கணிக்கப்படுதல் மட்டுமன்றி அச்சுறுத்தப்படுகின்றனர். இதனால் சிறுவர்களுக்கு உளப்பாதிப்பு ஏற்படுகிறது.

பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்களால் புறக்கணிக்கப்படுதல், யுத்த சூழ்நிலையால் பெற்றோரை இழந்து அநாதையாக்கப்படுதல், வேலை செய்யும் இடத்தில் துன்புறுத்தல் என சிறுவர்கள் உளப்பாதிப்புக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இதனையே தமிழகக் கவிஞர் ஒருவர் "படிக்காத கடிதங்களைப்போல் சிறுவர்களது உணர்வுகள் இன்று மதிக்கப்படாது போகிறது" என்று சிறப்பாக சுட்டிக்காட்டுகிறார்.

**சிறுவர்களை வேலைக்கமர்த்தல்**

இன்று உலகநாடுகளில் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கும் வறுமையினால், பொருளாதாரக் கஷ்டத்தினால் வறிய குடும்பத்து சிறுவர்கள் தமது கல்வி, சுதந்திரம், அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு என்பவற்றை இழந்த நிலையில், பெரியவர்களால் வேலைக்கமர்த்தப்படுகின்றார்கள். நாடுகளில் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கும் யுத்த சூழ்நிலையால் சின்னாபின்னமாக்கப்பட்ட பெற்றோர்கள், சிறுவர்களின் உழைப்பில் வாழவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பெரியவர்களால் சிறுவர்கள் சுரண்டப்படும் சந்தர்ப்பங்கள் உலகில் மேலோங்கிக் காணப்படுகின்றன. தேனீர்ச் சாலைகள், அழகு சாதன பொருட்களின் விற்பனை நிலையங்கள், வர்த்தக நிலையங்கள், வாகனம் திருத்தும் இடங்கள் எனச் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இதனால் தமது உடல் வளர்ச்சிக்கு கூடிய வேலைகளை அவர்கள் ஆற்ற வேண்டியுள்ளது. இப்படியான செயற்பாடுகளால் சிறுவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகிறது.

(வளரும்)

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## தமிழர் எப்பவும் பகடைக்காயளோ?

எப்பவும் சண்டையைக்காட்டித் தமிழரின்ரை தலையிலை மிளகாய் அரைக்கலாமோ எண்டு பாக்கினம்.

உதைத்தானே செய்யச் சொல்லித் திருப்பத் திருப்ப சீ.வியிட்டைச் சொன்னனாங்கள். வட மாகாண சபையிலை போய் இருந்திட்டு வராமல் எல்லா அரசாங்கத் திணைக்களங்களுக்கும் போய் அதிரடி விசிட் பண்ணுங்கோவன் எண்டு. ஆனால் அந்த ஆள் தன்ரை அறைக்குள்ளை போய் இருந்திட்டு வந்தவரே ஒழிய அங்கையும் மேலை கீழை போய் பாத்து அங்கை வேலை செய்யிற ஆக்களைக் கூப்பிட்டு கதைச்சதா நான் கேள்விப்படவுமில்லை.

இப்ப புதுக் கவர்னரா வந்தவர் அதை இப்ப செய்யத் துவங்கி இருக்கிறார். போன கிழமை அவர் வட மாகாண சபைக்குப் போய் ஒரு அதிரடி விசிட்டைச் செய்ததோடை அங்கை போன மற்ற நாள் வந்த புதன்கிழமை மக்கள் சந்திப்பை வட மாகாண சபையிலை நடத்தினவர்.

இப்பிடி நான் சொல்லுறதுக்குத் தயவு செய்து என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ எண்டு நான் எல்லா அரச திணைக்கள அதிகாரியளிட்டையும், ஊழியரிட்டையும் கேட்டுக் கொள்ளுறன். அண்டைக்கு வித்தி சுமந்திரனிட்டைக் கேட்ட மாதிரி நானும் உங்களைக் கேக்கிறன். உங்கடை நெஞ்சிலை கையை வைச்சுச் சொல்லுங்கோ உங்களிலை எத்தினைபேர் உங்கடை மனச்சாட்சிக்குப் பதில் சொல்லுறமாதிரி உங்கடை உங்கடை வேலையளைச் செய்யிறியள்?

நான் நினைக்கிறன் இனிமேல் கவர்னர் உப்பிடி எல்லா இடத்துக்கும் போய் அதிரடி செக்கிங் செய்வர் போலை. அதாலை இனிமேல் தலையிடியாக் கிடக்கும் அங்கை வேலை செய்யிறவைக்கு. 2009 க்குப் பிறகு இன்னும் வட மாகாணத்தின்ரை நிர்வாகம் ஒரு ஒழுங்குக்கை வரேல்லை. எல்லா இடத்திலையும் அரசியல் தலையீடுகள். இழுபறியள். என்ன திட்டத்தை எடுத்தாலும் அது சரி எண்டாலும் எதிர்ப்பினம். அதை நடக்கவிடாயினம். அப்பிடி வட மாகாண சபையிலை பல கிரிசகேடுகள் நடந்தது.

வட மாகாண சபையிலை பல கோமாளியள் இருந்தவை. உங்களுக்கு அவை ஆரெண்டு விளங்கும். அங்கை ஒரு கோமாளி நிர்வாகமா நடந்ததே ஒழிய வேறை ஒண்டும் நடேக்கேல்லை எண்டுதான் சொல்ல வேணும்.

சில கூட்டங்களிலையும், சந்திப்புக்களிலையும் கூட்டமைப்பினர் வட மாகாண சபையிலை ஒண்டும் நடக்கேல்லை எண்டதை ஒத்துக் கொள்ளினம். அப்பிடி அவை ஒத்துக் கொள்ளுறதுக்குப் பல காரணங்கள் இருக்கு. அதிலை ஒண்டு முதலமைச்சரா இருந்த விக்கி ஐயாவைப் பிழைகாறனாக்கிறது. மற்றது இனிவாற எலக்சனிலை வோட்டு வேண்டுறதுக்கு உப்பிடி ஏதாச்சையும் சொல்லிச் சனத்திட்டை நல்ல பேர் வேண்ட வேணுமெல்லே?

உதெல்லாத்துக்கும் முதல் உவையளின்ரை இதயத்தை ஒருக்காப் படம் பிடிச்சுப் பாக்க வேணும். சனத்துக்குச் சேவை செய்ய வேணுமெண்ட விருப்பமும், ஆர்வமும் இருக்கோ எண்டு. அதிலிருந்தால்தானே மற்றதைக் கதைக்கலாம். தங்களுக்குக் கிடைக்கிற வசதி வாய்ப்புகளை அனுபவிச்சுக் கொண்டு, இன்னும் தங்கடை பதவிக்குள்ளாலை தங்கடை பெரியதேப்பன், சிறிய தேப்பன்ரை ஆக்களுக்கு ஏதாச்சும் உதவி செய்யலாமோ எண்டு பாத்துக் கொண்டு இருக்கிறதுதான் அவையின்ரை நோக்கமா இருந்ததோ ஒழிய வேறை ஒண்டுமா எனக்குத் தெரியேல்லை.

இப்ப எங்கை போனாலும் அருவெருப்பாக்கிடக்கு. நேர்மை எண்டு நினைச்சவை எல்லாரும் பிழைவிட்டதைக் காணேக்கை பேசாமல் போய் சந்நதி மடத்திலை இருந்திடலாமோ எண்டும் ஒரு யோசினை வரும். அப்பிடிக் கேடு கெட்டதாப் போச்சுது உலகம். அரசியலுக்குள்ளை அரசியல் இருக்கலாம். இது எல்லாத்துக்கையும் அரசியல் இருந்தால் என்ன செய்யலாம். சனம் சாகத்தான் வேணும்.

இப்ப ஆளுநர் வந்து பொறுப்பை எடுத்து இருக்கிறார். ஏதாவது மாற்றம் வருகிதோ எண்டு பாப்பம். அவர் அரசாங்கத்தின்ரை ஆளாய் இருக்கிறபடியாலை அவரோடை சேட்டை விடாயினம். இருந்தாலும் தன்ரை தன்ரை மட்டத்திலை உவங்கள் திருகுதாளம் செய்யப் பாப்பங்கள். வட மகாணத்திலை இருக்கிற சனம் என்ன கர்மம் செய்ததோ தெரியாது. எதிலும் மீட்சி இல்லை. எல்லாத்துக்கும் பகடைக்காயாக்கிப் போடுறாங்கள் எண்டதை ஆரிட்டைச் சொல்லி அழ?

**- கோளரங்கன்**

---

## நவீன...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியீட்டாளராகவும் இருந்தவர். இவர் ‘முகம் தேடும் மனிதன்’ சிறுகதையை எழுதியுள்ளார். கணையாழி - கனடா சிறப்பிதழில் இவருடைய ‘சப்பாத்து’ என்ற சிறுகதை வெளிவந்திருந்தது. தன் பென்னம்பெரிய காலுக்கு அளவான சப்பாத்தைத் தேடிப் பிடிக்கிற கஸ்டத்தை இச்சிறுகதை எடுத்துரைத்தது. குமார்மூர்த்தி உயிர் வாழ்ந்த காலத்தில் 1995இல் வெளிவந்த ‘முகம் தேடும் மனிதன்’ சிறுகதைத் தொகுப்பிற்குப் பின்னால், அவர் மறைந்து ஓராண்டின் பிறகு 2002இல் அவரின் ஒட்டுமொத்த கதைகளையும் தொகுத்து ‘குமார்மூர்த்தி கதைகள்’ என்கிற நூல் வெளிவந்தது. குமார்மூர்த்தியின் படைப்பாளுமை, அவரின் கருத்தியல் முதலானவற்றையும் அறியவும் இச்சிறுகதைகள் துணை செய்கிறது.

‘முகம் தேடும் மனிதன்’ தொகுப்பிலுள்ள 11 கதைகளுடன், தொகுப்பின் பின்னால் இதழ்களிலோ பத்திரிகைகளிலோ வெளிவந்த இரண்டு கதைகளையும், வெளிவராத 12 கதைகளையும், முற்றுப்பெறாத ‘சிதைவுறும் சித்திரங்கள்’ என்ற நாவலின் பகுதி, சுயவிசாரிப்பான ‘என்னைப்பற்றி’ என்ற தலைப்பிலான கட்டுரைகளையும் இத்தொகுப்பு கொண்டிருக்கிறது. தொகுப்பில் இடம்பெறும் 26சிறுகதைகளில் முதல் எட்டுக் கதைகள் ஈழத்தைக் கதைப் புலமாகக் கொண்டவை. ஒன்பதாவது கதையான ‘எங்கள் ஊரும் பள்ளிக்கூடமும்’ என்ற கதையை தளமாற்றுக் கதையாகக் கொண்டு பார்த்தால் பத்தாம் கதையிலிருந்து இருபத்தோராம் கதைவரை (‘வாழைக்குலை’ என்ற கதை நீங்கலாக) பதினொரு கதைகள் கனடா மண்ணைத் தளமாகக் கொண்டவை. மேலே வரும் நான்கு கதைகளும் மறுபடி ஈழச் சூழலில் சஞ்சாரம் செய்பவை. ‘ஹனிபாவும் இரண்டு எருதுகளும்’, ‘பயணம்’ இரண்டும் முஸ்லீம் மக்களின் இடப்பெயர்ப்பு பற்றியவை. மீதிக் கதைகள் ஈழத்தில் போராட்டச் சூழலிலுள்ள தமிழர்களினதும் கனடாத் தமிழரினதும் வாழ்நிலைமைகளைத் தளமாய்க் கொண்டவை.

பொ. கருணாகரமூர்த்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் புத்தூரில் 1954 ஆம் ஆண்டில் பிறந்தவர். 1980 இல் இருந்து ஜேர்மனியில் வசித்து வருகிறார். ஜேர்மனியில் வாடகைக் காரோட்டியாகப் பணிபுரியும் இவர் புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களில் முதன்மையான ஒரு எழுத்தாளராகக் கருதப்படுகிறார். 1985 இல் கணையாழியில் வெளிவந்த ‘ஒரு அகதி உருவாகும் நேரம்’ எனும் குறுநாவல் மூலம் சிறுபத்திரிகை வாசகர்களுக்கு அறிமுகமானவர். டிசம்பர் 2010 இல் வெளிவந்த இவரது ‘பதுங்குகுழி’ சிறுகதைத்தொகுப்பு கனடாவின் தமிழ் இலக்கியத்தோட்டம் என்னும் இலக்கிய அமைப்பால் 2010 இன் சிறந்த சிறுகதைத்தொகுப்பாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றது. கிழக்கு நோக்கி சில மேகங்கள் (1996) ,அவர்களுக்கு என்று ஒரு குடில் (1999),கூடு கலைதல் (சிறுகதைத் தொகுப்பு), பதுங்குகுழி (2010) முதலான தொகுப்புக்கள் இவரின் பெயரில் வெளிவந்துள்ளன.

சுமதிரூபனின் சிறுகதைத் தொகுப்பான ‘யாதுமாகி நின்றாள்’ சிறுகதைத் தொகுப்பு புலம்பெயர் பெண்கள் புலம்பெயர் சமூகத்தில் எண்ணற்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழலைப் பேசுகிறது. பெண், குடும்ப அமைப்பிலிருந்து வெளியேறி தனித்து வாழ முடியும் என்பதைச் சில கதைகள் உணர்த்துகின்றன. பெண்நிலை நோக்கினுள் விளையும் மோதல்களினதும் பாலியல் உணர்ச்சிகளினதும் சுயகேள்விகளை நாம் சுமதி ரூபனின் கதைகளில் காணமுடிகிறது. பெண்கள் வெளிப்படையாக எழுதத் தயங்கும் பாலியல் பிரச்சினைகளை, உணர்வுகளை தன் கதைகளில் எழுதுகிறார்.

தமிழ் உணர்வாளனாக வாழும் புலம்பெயர் படைப்பாளன் தமிழ் எழுத்தாலும் தன் இன, பண்பாட்டு உணர்வினாலும், தமிழன் என்கிற அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்கிறான். அவன் பிறந்த நாட்டிலேயே தன் சுயமிழந்து அகதியாகி, அலைக்கழிந்து, இறுதியிலே தன் இருப்பை நிலைப்படுத்திக் கொள்ள புலம்பெயர் வாழ்வை மேற்கொண்டவன். இவனால் படைக்கப்பட்ட ‘புலம் பெயர் இலக்கியம்’ எதிர்காலத்தில் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வுகளுக்குப் புதிய பார்வையையும் வெளிச்சத்தையும் கொடுக்கும் எனின் அது மிகையில்லை.

(முற்றும்)

நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

61

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

மடுவிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தபோது மடு மாதாவின் திருச்சொரூபத்தையும் அங்கிருந்து இடம்பெயர்த்தி விட்டனர். ஏற்கனவே 'ரணகோஷ' நடவடிக்கையின்போது மாதா கோவில் தாக்கப்பட்டு அறுபதுக்கும் மேற்பட்டோர் பலி கொள்ளப்பட்ட சம்பவம் அவர்கள் ஒவ்வொருவர் மனதிலும் ஆழமாகப் பதிந்திருந்தது. எனவே மடு இராணுவக் கட்டுப்பாட்டில் வரும்போது பௌத்த மதவெறி பிடித்த படையினரால் மாதா சொரூபத்துக்கு ஊறு விளைவிக்கப்படும் என அஞ்சினார்கள்.

பங்குத் தந்தையும் மாதாவை இராணுவத்தினர் கையில் விட்டுவர விரும்பவில்லை. மன்னார் ஆயரிடமும் ஒப்படைப்பதற்கான வாய்ப்புக்களும் கிட்டவில்லை. எனவே மாதாவின் திருச்சொரூபத்தை தேவன்பிட்டி தேவாலயத்தில் கொண்டுவந்து வைப்பதாக முடிவெடுக்கப்பட்டது. மக்களும் அதை விரும்பினர். மடு தேவாலய வளாகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த மக்களும் மாதா எங்கு சென்றாலும் தாங்களும் அங்கேயே குடியேறப் போவதாகக் கூறி தேவன்பிட்டிக்கே வந்து விட்டனர்.

தேவன்பிட்டி குடிநீருக்கே தட்டுப்பாடு நிலவும் ஒரு கிராமம். அங்கு பரம்பரை பரம்பரையாக ஐம்பதுக்கு உட்பட்ட குடும்பங்களே வாழ்ந்து வந்தன. அங்குள்ள நீரின் பாதிப்பு காரணமாக அப்பகுதி மக்களுக்கு கண்களில் ஒருவித பாதிப்பு ஏற்படுவதுண்டு. இடம்பெயர்ந்து மடுவிலிருந்து தேவன்பிட்டிக்கு வந்த மக்கள் அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அவர்கள் மாதாவைச் சுற்றியே தாங்கள் குடியிருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர்.

கந்தசாமி இந்துவாக இருந்த போதிலும் அவனின் மனைவி மேரி புஷ்பம் கிறிஸ்தவ மதத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து வந்தாள். கந்தசாமி அதைத் தடுப்பதுமில்லை. புஷ்பம் அவனைத் தனது சமயத்தில் சேரும்படி கேட்பதுமில்லை. மேரி புஷ்பம் அப்போதுதான் மாலை ஆராதனையை முடித்து விட்டு வந்து இரவு உணவு தயாரிப்பதற்காக அடுப்பை மூட்டினாள். கந்தசாமியும் இலுப்பைக்கடவையில் இருந்து வந்து சேர்ந்தான்.

குருக்களூரில் சிவமும் அவனின் தோழர்களும் துணை ஆயுதக் குழுவிடமிருந்து தனது உயிரைக் காப்பாற்றி மடுவுக்குக் கொண்டுவந்து சேர்த்த பின்பு அவன் போராளிகளின் தீவிர ஆதரவாளனாகி விட்டான். இரவு, பகல் பாராது எவ்வளவு ஆபத்து நிறைந்ததென்றாலும்கூட அவர்களுக்கு உதவிகளைச் செய்து வந்தான். மேரியும் அதைத் தடுப்பதில்லை. தன்னுடன் படித்த சிவம் ஒரு முக்கிய போராளியாக



இருப்பதை நினைத்து அவளும் பெருமைப்பட்டாள்.

சோயாவை அவித்துவிட்டு சிறிதளவு தேங்காய்ப் பூவும் சீனியும் போட்டு குழைத்து இருவரும் சாப்பிட்டனர். சாப்பிட்டு முடிந்ததும் இருவரும் வெளியில் நிலவில் இருந்து சிறிது நேரம் போராட்டம் பற்றியும் இடப்பெயர்வு பற்றியும் கதைத்தனர். அது முன்னிலவுக் காலமாததால் பத்து மணிக்கே நிலவு பட்டுவிட அவர்கள் போய்ப் படுத்துக் கொண்டனர். இருவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது ஏதோ சத்தம் கேட்பது போல் தோன்றவே கந்தசாமி, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த புஷ்பத்தை எழுப்பினான்.

"ஏய்.. எழும்பு... ஏதோ சத்தம் கேக்குது..." என்றுவிட்டுப் படுக்கையை விட்டு எழுந்தான் கந்தசாமி.

அவளும், "என்னது..?", என்றவாறே திடுக்கிட்டு எழுந்து கொண்டாள்.

எழுந்து வெளியே வந்து பார்த்தபோது, ஆலய முன்றலில் சிலர் நிற்பதையும், 'டக், டக்', என மெல்லியதாக ஒரு ஒலி எழுவதையும் அந்த இருளிலும் அவனால் அவதானிக்க முடிந்தது. அவன் சற்றும் தாமதியாமல், "கள்ளன், கள்ளன்", எனக் கத்தினான். புஷ்பமும், "கள்ளன்", என பலமாகக் கத்தினாள். சத்தம் கேட்டதுமே ஆலய அருட் சகோதரர் கதவைத் திறந்து கொண்டு, ரோர்ச்சை அடித்தவாறே வெளியில் வந்தார்.

சத்தம் கேட்டு ஆலயத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களிலிருந்து பலரும் ஓடி வரவே ஆலய முன்றலில் நின்றவர்கள் ஓட ஆரம்பித்தனர். கந்தசாமி ஓடிப்போய் ஒருவனைக் கட்டிப்பிடித்து விழுத்திவிட்டான். ஆலயக் காவலாளி எறிந்த கொட்டன் ஒருவனின் முழங்காலில்பட அவன் கீழே விழுந்து விட்டான். மற்றவர்கள் நால்வரும் கடற்கரைப் பக்கம் ஓடிவிட்டனர். மக்கள் அவர்களை நோக்கி ஓட அவர்கள் வள்ளத்தின் எஞ்சினை 'ஸ்ராட்' செய்து படகேறிவிட்டனர். இருளில் படகுபோகும் ஒலியைவிட வேறு எதையும் புரியமுடியவில்லை.

பிடிபட்ட இருவரையும் மக்கள் ஆலய வாசலுக்குக் கொண்டு வந்தனர். அதற்குள் ஆலயக் காவலாளி, 'பெற்றோல்மக்ஸ்' விளக்கைக் கொழுத்திக் கொண்டு வந்துவிட்டார். அந்த ஊர்க்காரரான யோசேப் மிகவும் கோபமடைந்திருந்தான். பிடிபட்ட இருவருக்கும் கன்னங்களில் மாறி மாறி அறைந்து விட்டு அவர்களை முழங்காலில் நிற்க வைத்தான். உடனடியாகவே அங்கு வந்த அருட் சகோதரர் கண்டிப்பான குரலில், "யோசப், அவையளை ஒண்டும் செய்ய வேண்டாம்", என்றார். அந்தக் கட்டளையுடன் அனைவரும் இருவரையும் விட்டு விலகிக் கொண்டனர்.

அருட்சகோதரர் தெளிவாகவும் நிதானமாகவும் பேசினார், "நீங்கள் எல்லாரும் நடுஇரவிலை இஞ்சை ஏன் வந்தனீங்கள் எண்டதை மறைக்காமல் சொன்னால் உங்களுக்கு ஒரு பிரச்சினையும் வராமல் நான் பாப்பன், அப்பிடி நீங்கள் சொல்ல மறுத்தால் உங்களை போராளியளிட்டை ஒப்படைக்கிறதை விட வேற வழியில்லை",

முழங்காலில் நின்றவர்களில் ஒருவன், "போராளிகளிடம் ஒப்படைப்பது", என்ற வார்த்தைகளைக் கேட்டதுமே ஓடிப்போய் அருட்சகோதரரின் காலில் விழுந்து கெஞ்சினான். "வேண்டாம்!, சுவாமி வேண்டாம்! நான் எல்லா உண்மை களையும் சொல்லிடுறன்", என்றான் அவன்.

அப்போது தான் கந்தசாமி அவனின் முகத்தை நன்றாகப் பார்த்தான். அவன் குருக்களூரில் தன்னைக் கடத்திக் கொண்டு சென்று கொலை செய்ய முயன்ற ஆயுதக் குழுவில் ஒருவன் என்பதை இனம் கண்டுகொண்டான். ஆனால் அருட்சகோதரர் விசாரிக்கும் போது குறுக்கீடு செய்வது முறையல்ல என்பதால் கந்தசாமி அமைதி காத்தான்.

"சரி.. சரி.. சொல்லு", என்றார் அருட்சகோதரர்.

அவன் சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு பயந்த குரலில் சொல்ல ஆரம்பித்தான். "ஆமிக் கொமாண்டர் என்னைக் கூப்பிட்டு எப்பிடியாவது மாதா சிலையைக் கொண்டு வந்தால் பெரும் தொகைப் பணம் தரலாம் எண்டு சொன்னார். நான் பள்ளிமுனையிலை போய் சிலரை இரகசியமாய்ச் சந்திச்சு இயக்கம் மடுமாதாவைக் கடத்திக் கொண்டு போய் தேவன்பிட்டியிலை வைச்சிருக்கிறாங்கள் எண்டும் அதை எப்பிடியும் மீட்டுக் கொண்டு வந்து ஆயரிட்டை ஒப்படைக்க வேணுமெண்டும் சொன்னன். அவையும் அதை நம்பியிட்டினம். நாங்கள் எல்லாரும் மீன்பிடிக்கிற மாதிரி வள்ளத்திலை வந்தம்"

"சரி... அப்பிடியெண்டால் ஆயரிட்டை அனுமதி எடுத்த நீங்களே?"

"இல்லை! ஆயர் களவை ஏற்க மாட்டார். அதாலை சொல் லேல்ல... சொரூபத்தைக் கொண்டு போய் ஆமிக் கொமாண்டரிட்டை ஒப்படைக்கிறதுதான் என்ரை திட்டம்"

மற்றவன் அவசரமாகக் குறுக்கிட்டான், "சுவாமி! இவன் அதை எங்களிட்டை சொல்லாமல் ஏமாத்திப் போட்டான். நாங்கள் சொரூபத்தை ஆயரிட்ட ஒப்படைக்கிறது எண்டு தான் நினைச்சம்"

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# நவீன இலக்கியப் பரப்பில் 'புலம்பெயர் சிறுகதைகள்'

■ மனோகரன் ரவீஸ்வரன்




(சென்றவாரத் தொடர்ச்சி)

விமல் குழந்தைவேல் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றில் உள்ள கோளாவில் கிராமத்தில் பிறந்தவர். தொண்ணூறுகளில் எழுதத் தொடங்கிய இவரது படைப்புக்கள் வீரகேசரி, தினகரன், கனடா செந்தாமரை, பாரீஸ் ஈழநாடு, லண்டன் தேசம் மற்றும் உயிர்நிழல் போன்ற இதழ்களில் வெளிவந்துள்ளன. தெருவில் அலையும் தெய்வங்கள் (1988), அவளுக்குள் ஒருத்தி, அசதி முதலான சிறுகதைத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன.

தற்போது இலண்டனில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற விமல் குழந்தைவேலின் 'அசதி' தொகுப்பிலுள்ள பல சிறுகதைகள் மட்டக்களப்பின் அக்கரைப்பற்று, கோளாவூர் பிரதேசங்களை உள்ளடக்கிய தென்கிழக்கு பிரதேசச் செல்வாக்கினை நமக்குக் காட்டுகின்றன. இவரின் அசதி தொகுப்பிலுள்ள 'ஆச்சியும் பூசாரியும், சின்னாம்பி, அசதி, பேய் நாவை' ஆகிய சிறுகதைகள் சிலவற்றை எடுத்துப் பார்க்கலாம். விமல் குழந்தைவேலிடம் ஈழத்தின் கிராமியச் செல்வாக்குடன் கூடிய வாழ்வனுபவம் அவரின் படைப்புக்களூடாக வெளிப்படுதல் மிக முக்கியமானது. மரபுகள், நம்பிக்கைகள், வழக்காறுகள் என்பவற்றுடன் அவர் கையாளும் வட்டார வழக்கு மொழிநடையும் முக்கியமானது.

இலங்கையில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாமோகன் புலம்பெயர்ந்து பிரான்சில் வாழ்கிறார். கவிதை, சிறுகதை, நாடகம், மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் தனது ஆளுமையைச் செலுத்தி வருகிறார். கே.எல்.நேசமித்திரன் என்ற புனைபெயரிலும் எழுதியவர். புலம்பெயர முன்னர் கொழும்பில் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர். 1983இல் இருந்து பிரான்சில் புலம்பெயர்ந்து வாழ்கிறார். பிரஞ்சுமொழியில் புலமையுடையவர். இவரின் சில கோட்டோவியங்கள் புகலிட இதழ்களில் வெளிவந்துள்ளன. எக்ஸில் சஞ்சிகையில் இவரின் பல கதைகள் வந்துள்ளன. இவரின் 'நிஷ்டை' சிறுகதைத்தொகுதி எக்ஸில் வெளியீடாக வெளிவந்தது. 'நிஷ்டை' தொகுப்பில் உள்ள 12 சிறுகதைகளும் உதிரியாக வெளிவந்த புகார், பாம்பு, குளிர், 20 ஈரோ, ஆகியனவும் நவீன தமிழ்ச் சிறுகதை வடிவத்தின் சாத்தியப்பாடுகளை உள்வாங்கிய கதைகள். மறுபுறம் 'ஜெயந்தீசன் கதைகள்' என்ற கலாமோகனின் கதைகள் தொகுப்பு, 67 குறுங்கதைகளைக் கொண்டமைந்தவை. இக்கதைகளை Satire (கேலி, வசை) வகைக் கதைகள் என எஸ்.பொ. குறிப்பிடுகிறார். இவை சிறுகதைகள் என்ற சட்டகத்துள் அமையாத சிறுகதைகள் ஆகும்.

வெவ்வேறு சம்பவங்களை துண்டு துண்டுகளாக வெவ்வேறு கோணத்தில் ஒன்றின்






மீது ஒன்றாகப் பொருத்தி முழுமையான இறுதிவடிவத்தை வளைத்து எடுக்கும் அழகியலை மொந்தாஜ் (montage) கலை என்று சொல்வார்கள். சிதறுண்ட மனங்களையும், இருத்தலியல் இடர்களையும் கலாமோகன் இந்த அழகியல் வடிவத்தில் எழுதியிருப்பது சிறுகதைப் பரப்பில் அவருக்கே உரிய தனித்துவ இடத்தை தக்கவைக்கிறது. ஒருமித்த பார்வையில் கலாமோகனின் சிறுகதைகளும், குறுங்கதைகளும், பின்வருவனவற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளதை அவதானிக்கலாம். ஆண், பெண் ஒழுக்கவியல் மரபினைக்கேள்விக்கு உட்படுத்துதல், குடும்ப உறவுநிலையில் ஏற்படும் சிக்கல்களை உணர்த்துதல், குருட்டு நம்பிக்கையும், பிரபல்யத் தேடலும் வளர்ந்து வருவதை ஏளனஞ் செய்தல், சூழலின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளல். தமிழ்ப் பண்பாட்டால் கட்டமைக்கப்பட்ட மாந்தர்கள் முற்றிலும் வித்தியாசமான அந்நிய கலாசார சூழலிலே வாழ நேரிடுகின்றபோது அவர்தம் சுய அடையாளத்துடனான பண்பாட்டுப் பெறுமானங்கள் உடைந்து போகின்றன. ஒருவகையில் முதலாளித்துவ உலகும், பல்கலாசாரச் சூழலும் ஏற்படுத்தும் தாக்கத்தினால் இந்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது தமிழ்ப் பண்பாட்டின் ஒழுக்கவியல் மரபிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இளைஞர்களாகவும் குடும்பமாகவும் புலம்பெயர்ந்துள்ள ஈழத் தமிழர்கள் வாழ்வை. தாயகத்து சூழலிலிருந்து நோக்கும் போது இவ்வாறான கேள்வியே மிஞ்சுகிறது.

ஷோபாசக்தியின் 'தேசத்துரோகி' சிறுகதைத் தொகுப்பில் மொத்தமாக 14 சிறுகதைகள் அடங்கியுள்ளன. அகதிகளாக வெளிநாடுகளுக்கு குறிப்பாக பிரான்சின் பாரிசுக்கு புலம் பெயரும் ஈழத் தமிழர்களின் வாழ்வியலை இந்தச் சிறுகதைகள் பதிவு செய்கிறது. இதுபோல 'எம்.ஜி.ஆர். கொலை வழக்கு' பத்து சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு. 'ரம்லான்', 'வெள்ளிக்கிழமை', 'திரு.மூடுலிங்க' என்ற இந்த மூன்று சிறுகதைகள் தவிர்த்து தொகுப்பில் உள்ள மற்ற ஏழு சிறுகதைகளும் ஷோபசக்தி அரசியல் களத்திலே செய்து வரும் புலி எதிர்ப்பு பிரசாரத்தின் இலக்கியச் சாயம் பூசிக் கொண்ட கதைகள் ஆகும்.

குமார்மூர்த்தி யாழ்ப்பாணம், நெடுந்தீவைச் சேர்ந்த எழுத்தாளர். இவர் ஈழ விடுதலைப் போராட்டத்தால் புறந்தள்ளப்பட்டு கனடாவில் வாழ்ந்து வந்துள்ளார். கலை - இலக்கிய முயற்சிகளில் ஈடுபாடு கொண்ட இவர் காலம் போன்ற சஞ்சிகைகளின்

(19ஆம் பக்கம் பார்க்க)




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.


# அடவி :

## மௌனத் திரைப்படத்தின் மீள்வருகை

பாஸ்கரன்

தமிழ் சினிமா நூற்றாண்டை சிறப்பிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட 'அடவி' என்ற மௌனத் தமிழ் திரைப்படம் சென்னை சர்வதேச திரைப்பட விழாவில் அண்மையில் திரையிடப்பட்டது. சினிமா பேசத்தொடங்கிய காலத்தில், சாப்ளின் உள்ளிட்ட மௌனத் திரைப்பட மேதைகள் 'சினிமா செத்து விட்டது' என அறைகூவினார்கள். அதில் இருந்த உண்மை இப்படத்தைப் பார்த்த பொழுது புரிந்தது. 'அடவி' திரைப்படத்தை 'ரப் கட் வெர்ஷனை' பைலட் ட்ராக் ஒலியுடன் பார்த்து இருக்கிறேன். தற்பொழுது ஒலியில்லாமல் 'அடவி' திரைப்படத்தைப் பார்த்த போது அதன் உயரம் இமயம் தாண்டி வளர்ந்து இருப்பதை உணர முடிந்தது. எனவேதான் இத்திரைப்படம் சர்வதேச திரைப்பட விழாக்களில் கொண்டாடப்பட்டு வருகிறது.

சென்னை எம்.ஜி.ஆர். அரசு திரைப்படக் கல்லூரியின் பேராசிரியர் வேல்முருகன் இயக்கத்தில் இப்படம் உருவாகியுள்ளது. செழியனிடம் உதவியாளராகப் பணிபுரிந்த எஸ்பி. மணி படத்திற்கு ஒளிப் பதிவு செய்துள்ளார். தொகுப்பாளர் ஜெகநாதன், மலை வாழ் மகன் தங்கமணி ஆகியோர் கூட்டணி அமைத்து, மலை வாழ் மக்களை மலையிலிருந்து விரட்டும் அதிகார வர்க்கத்தினர் மீது போர் தொடுத்துள்ளார்கள். கவிஞர் விக்கிரமாதித்யன் கதை நாயகனாகவே 'அடவியில்' வாழ்ந்திருக்கிறார். சுயாதீன படைப்பாக உருவாகி இருக்கும் 'அடவி' திரைப்படத்தை, அகன்ற திரையில் காண்பதற்கு ஆவலோடு காத்திருக்கிறேன்.



# பகிடிவதையின் ஆரம்ப இடம் பாடசாலையா?

■ ச.ஞானகுமார்
(ஆசிரியர்)

இலங்கையில் பாடசாலைக் கல்வி முறை பல வழிகளில் படிமுறையான மாற்றங்களுக்கு உட்பட்டு வளர்ச்சி பெற்றுள்ளது. குறிப்பாகக் கல்விச் சட்டங்கள், கல்விச் சீர்திருத்தங்கள் வழியாக பல விருத்தியை அடைந்து வந்துள்ளது. 1992 தேசிய கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப தேசிய இலக்குகள், அவற்றை அடைவதற்கான தேர்ச்சிகள் இயம்பப்பட்டு 2003 இல் புதிய கல்விச்சீர்திருத்தம் பாடசாலைக் கல்வியில் நடைமுறைக்கு வந்தது. இந்த வகையில் 'மாணவர் உளநெருக்கீடு" என்னும் தொனிப்பொருளை வழிகாட்டலும் ஆலோசனையும் மற்றும் உளவியல் என்னும் பாடத்தில் அமுல்படுத்தி தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஒரு பாடநெறியாக ஆசிரியர்களுக்கான பயிற்சியின் போது போதித்து வருகிறார்கள்.




இப்பாட நெறியைக் கற்ற ஆசிரியர்கள் பாடசாலையில் மாணவர்கள் மத்தியில் அதன் உத்திகளைக் கையாண்டு வருகின்றனர். இது இவ்வாறிருக்க பாடசாலையில் புதிதாக இணையும் இடைநிலைப்பிரிவு மாணவர்களுக்கான பகிடிவதை தொடர்ந்தும் நடைபெற்று வருவது மனவருத்தத்திற்கு உரியதே. பகிடிவதை என்பதை Ragging என்ற சொல்லால் பொதுவாக அழைப்பர் பகிடிவதைக்கு உட்படுத்தப்படுபவர்கள் விரக்தியும் பகிடிவதையை செய்பவர்கள் அதீத மகிழ்ச்சியிலும் இருப்பர் என்பது இதன் விளக்கமாகும். பொதுவாக ஆசிய நாடுகளில் பகிடிவதை Ragging என்ற சொல்லால் பெயர் பெறுகின்றது.

பாடசாலையில் பகிடிவதை என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. சமூக அங்கீகாரம் பெற்ற முகவராக குடும்பம், பாடசாலை திகழ அதன் செயற்பாடுகள் சமூகத்தின் மாற்றத்திற்கு அடிப்படையாக அமைய வேண்டும். பள்ளி மாணவர்களின் வயதெல்லை, மனநல நோன்பு, மனவெழுச்சி, குடும்பப் பின்னணி, பொருளாதாரநிலை என்பன பகிடிவதையை ஏற்படுத்தும் சில காரணங்கள் ஆகும். உதாரணமாக மாணவர் மத்தியில் மனவெழுச்சித் தாக்கம் வயது வேறுபாடுகளை இல்லாதொழிக்கவே கல்வி அமைச்சு ஆண்டிறுதிப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களை தரம் உயர்த்தி (வகுப்பேற்றம்) அடுத்த தரத்தை கற்க அனுமதி வழங்கும் சுற்றுநிருபங்களை வெளியிட்டது.

பகிடிவதைக்கு ஆதரவளிப்போர் அது புரிந்துணர்வையும், குழு இணக்கத்தையும், எதையும் தாங்கும் ஆற்லையும் வளர்க்கும் என்று அலங்காரமாகக் கூறுவர். ஆனால் நடைமுறையில் அது உயிர் பறிப்பாக மாறிய சம்பவங்களும் உண்டு. மனவெழுச்சிக் குழப்பங்களுக்கும் உளநெருக்கீடுகளுக்கும் அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள். தொன்மையான கல்வி முறையில் (குருகுலக்கல்வி) பகிடிவதை இருந்ததில்லை. அது அந்நியரின் ஆட்சிக்குப் பின்னரே குறிப்பாக இரண்டாம் உலகப்போருக்கு பின்பே வளர்ச்சி கண்டது என்றால் மிகையாகாது. முன்னர் இராணுவப் பயிற்சி முகாம்களிலேயே பகிடிவதை இடம்பெற்று வந்தது. போரில் ஈடுபட்டவர்கள் கல்லூரிகளில் படிப்பதற்கு வரத் தொடங்கிய காலத்தில் இருந்து ஆங்காங்கே பகிடிவதை இடம்பெறத் தொடங்கியது.

'அவர்களைப் புதிய சூழலுக்கு இசைவாக்கம் அடைய வைப்பதே ஆரம்பகால நோக்கம்' பின்னர் கல்வி நிலையங்களில் புதிதாக இணையும் நபர்களுக்கான வதையாயிற்று. புதிதாக வரும் மாணவரை இசைவாக்கமடைய வேறுவழி இல்லையா? என்ற வினா எம்மத்தியில் எழுகிறதல்லவா மாணவரை அடக்குவது, அடிமைப்படுத்துவது என்பது ஒரு இழிநிலையான செயற்பாடு. இவ்வாறான நிலையில் உளநெருக்கீட்டுக்கு உட்பட்டவர்களை மீளவும் உலகிற்குக் கொண்டுவர இயலாத காரியமும் நடைமுறையில் அதிகரித்துள்ளது. அண்மைய தகவல்களின்படி ஐம்பது இலட்சம் மாணவர்கள் வரை அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளிலே பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். இதில் ஒரு பகுதியினர் கல்வி நிலையங்களை விட்டு விலகி விடுகின்றனர்.

பாடசாலையில் உயர்தர மாணவர்களின் இச் செயற்பாடு சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு வழிமுறையாக அமைகிறது. பாடசாலையில் தெரிவுக் குழுக்களால் தெரிவு செய்யப்படும் மாணவ தலைவர்கள் இவ்வாறான பகிடிவதையில் ஈடுபடுதல் அதானிக்க முடிகிறது. இது பரவலாக பாடசாலைகளிலே நடைபெறுகிறது. இதனால் ஏற்படும் விரக்தி காரணமாக பாடசாலையில் இருந்து இடைவிலகல், திடீரமரணம், குழுமோதல், அடிதடி, போதைப்பாவனை போன்ற அசம்பாவிதங்கள் இடம்பெற வழிவகுக்கின்றன.

பகிடிவதை உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் விடுதிகளில் இரவு நேரங்களில் பலமாக இடம்பெறுவதை அறிய முடிகிறது. பகிடிவதையில் தகாத வார்த்தைகளே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. உடல் வதை மிகவும் குரூரமாகவும் வஞ்சகமாகவும் பழி தீர்க்கப்படுகின்றன. முதுநிலை மாணவர்கள் எல்லோரும் பகிடி வதையில் ஈடுபடுவார்கள் எனக் கூறமுடியாது' எனினும் அவ் முதுநிலை மாணவர்கள் பகிடிவதையை எதிர்த்து சில அமைப்புக்களை உருவாக்கி வந்துள்ளார்கள். அது பெரியளவில் பலனளிக்கவில்லை. 1998ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டம் பகிடிவதைக்கு எதிராக இலங்கையில் உருவாக்கப்பட்டது. அகப்படுவோர் தண்டனை பெறக்கூடிய சட்ட ஏற்பாடு இருக்கின்றதாயினும் பகிடிவதை தொடர்ந்து கொண்டிருக்கும் செய்தி பரவலாக அறிந்த விடயமே!

இப்போதைய நல்லாட்சி அரசும் பகிடிவதையை முற்றாக கல்வி நிலையங்களில் இருந்து தவிர்ப்பதற்கான சுற்றுநிருபங்களை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. பகிடிவதையில் ஈடுபடுவோர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி அதன் மோகத்திலும் ஈடுபட்டு வருதல் பரிதாபத்திற்குரியதாகும். அரசியல் பழிவாங்கல் இன மோதல் குழு தமது அதிகாரத்தை பகிடிவதை என்ற போர்வையில் நாடகமாடி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பல்லின மாணவரும் பயிலும் நிலை தோற்றம் பெற்றுள்ளது. பிரச்சினைகள் தோன்றும்போது பெரும்பான்மை இன மாணவர் சாதகமான நிலையில் உள்ளனர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

சமூக ஏற்றத்தாழ்வுகளும் வர்க்க நிலைப்பட்ட ஏற்ற இறக்கங்களும் பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரை மாணவரின் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இது இலங்கையில் மட்டுமின்றி உலகளாவிய நிலையில் காணப்படும் ஒரு பொதுவான தோற்றப்பாடு என நாம் விளங்க முடியும். 'மாற்றம் ஒன்றே உயர்வைத் தரும்' என்ற வாக்கிற்கிணங்க பகிடிவதையை நாம் நகைச்சுவையாக எடுத்தல் ஆகாது. இதனை சிந்தனை கருப்பொருளாக நோக்கி மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் சக்தி மாணவர் சமூகத்தினால் மட்டுமே முடியும்.



ராஷ்மிகா மந்தனாவுடன் விஜய் தேவரகொண்டா இணைந்து நடித்த 'டியர் கொம்ரேட்' படத்துக்குப் பிறகு, கிராந்தி மாதவ் இயக்கும் புதிய படத்தில் விஜய் தேவரகொண்டா நடிக்கிறார். அதில் கேத்ரீன் தெரஸாவுக்கு முக்கிய வேடமாம்.



பிரபுதேவாவின் நடன அமைப்பில், யுவன் சங்கர் ராஜாவின் இசையில், தனுஷ் எழுதிய 'ரெளடி பேபி...' பாடல் 10 கோடி பார்வைகளை கடந்துள்ளது.

10 கோடி பார்வைகளைக் கடந்த முதல் தமிழ் பாடல் இதுதான். பாடலுக்கு தனுஷூடன் குத்தாட்டம் போட்ட சாய்பல்லவி மகிழ்ச்சியில் உள்ளார்.



வெற்றிமாறன் - தனுஷ் மீண்டும் இணைந்துள்ள படத்துக்கு அசுரன் எனப் பெயரிட்டுள்ளனர்.

நாயகியாக மஞ்சுவாரியார் நடிக்கவுள்ளார். படத்தின் கதை விவசாயிகளை மையமாகக் கொண்டது எனக் கூறப்படுகின்றது.



அறிமுக இயக்குநர் கிருஷ்ண ரோகாந்த் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்கவுள்ளார் விஜய் சேதுபதி.

படத்தில் அவருக்கு இசைக்கலைஞர் வேடம். படத்துக்காக 150 வருடம் பழைமையான தேவாலயம் அமைக்கப்படுகின்றது. படப்பிடிப்பு வரும் மார்ச்சில் தொடங்குகிறது.



இந்திய விஞ்ஞானி ஒருவரின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகிறது. இதில் நாயகனாக நடிக்கும் மாதவன் ஆனந்த மகாதேவனுடன் இணைந்து இயக்குவதாக இருந்தார்.

ஆனால், ஆனந்த் மகாதேவன் இப்போது படத்தில் இருந்து விலகிவிட்டார். இதனால் மாதவனே முழுமையாக படத்தை இயக்கவுள்ளார். தமிழ் உட்பட 3 மொழிகளில் படம் வெளியாகவுள்ளது.

தமிழ், மலையாளம், கன்னட மொழிகளில் நடித்துவந்த வரலட்சுமி இப்போது தெலுங்கிலும் அறிமுகமாகிறார்.

சந்தீப் கிஷன், ஹன்சிகா நடிக்கும் இந்தப் படத்தில் வரலட்சுமிக்கு கனமான வேடம் வழங்கப்பட்டுள்ளதாம்.





பேய்ப் படம் ஒன்றில் ஜி.வி. பிரகாஷூடன் நடிக்கவுள்ளார் ரைசா வில்சன். இன்னமும் பெயரிடப்படாத படத்தை கமல் பிரகாஷ் என்பவர் இயக்குகிறார். நாயகன் ஜி.வி. பிரகாஷே இந்தப் படத்திற்கு இசையமைக்கிறார்.



'நாம் மட்டுமல்ல நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். அதற்காகவே எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். விதவிதமான ஆடைகளை அணிகிறேன் எனக் கூறியுள்ளார் யாமி கௌதம்.




# தலைவராகப் பரிந்துரை


அவுஸ்ரேலிய ஒருநாள் போட்டி அணியின் தலைவராகத் தற்போது ஆரோஞ் பின்ஞ் விளங்கினாலும் ஸ்ரீவ் சிமித்துக்கு விதிக்கப்பட்ட தடை முடிந்த பின்னர் அவரே உலகக் கிண்ணம் உட்பட இனிவருங்காலத்தில் அவுஸ்ரேலிய அணிக்குத் தலைமை தாங்குவார் என்பதே பலரதும் நம்பிக்கை. ஆனாலும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு அவுஸ்ரேலிய அணியின் தலைவராக சகலதுறை வீரரான கிளென் மக்ஸ்வெல்லை நியமிக்க வேண்டுமென முன்னாள் வேகப்பந்துவீச்சாளரான மிட்செல் ஜோன்சன் கடந்தவாரம் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுடனான ஒருநாள் தொடரின் தோல்வியின் மூலம் தொடர்ச்சியாக 6 ஆவது ஒருநாள் தொடரை அவுஸ்ரேலியா இழந்துள்ளது. இதில் அவுஸ்ரேலிய அணிக்கு 3 முறை ஆரோன் பின்ஞ்சும், 2 முறை சிமித்தும் ஒரு முறை ரிம் பெயினும் தலைமை தாங்கியிருந்தார்கள். எனவே சிமித் தலைமையிலும் தோல்வி ஏற்பட்டதையும் மக்ஸ்வெல் தற்போது நடைபெற்றுவரும் பிக்பாஸ் தொடரில் மெல்பேர்ண் ஸ்ராஸ் அணிக்குத் தலைமை தாங்குவதையும் உலகக் கிண்ணப் போட்டிகளில் கவனம் செலுத்துவதற்காக இம்முறை ஐ.பி.எல். ஏலத்தை தவிர்த்ததையும் போட்டி ஆரம்பிக்கும் முன்னதாக வீரர்களுடன் கலந்துரையாடும் மக்ஸ்வெல்லின் குணத்தையும் பாராட்டியே ஜோன்சன், மக்ஸ்வெல்லை தலைவராகப் பரிந்துரை செய்துள்ளார். ஆனாலும் அதற்கான வாய்ப்பு இல்லை என்பதே யதார்த்தமாக உள்ளது.

# மைதானம் புனரமைப்பு

இங்கிலாந்தின் பாரம்பரியமிக்க லோட்ஸ் மைதானத்தைப் புனரமைப்பதற்கு எம்.சி.சி. அனுமதி அளித்துள்ளது. அந்தவகையில் இந்தாண்டு லோட்ஸில் நடைபெறவுள்ள ஆஷஸ் தொடரின் இரண்டாவது போட்டி முடிவடைந்ததும் எதிர்வரும் ஓகஸ்ட் 24ஆம் திகதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகவுள்ளன. லோட்ஸ் மைதானத்தில் காணப்படும் ஹோம்ரன் மற்றும் எட்றிச் பெயர்கள் சூட்டப்பட்ட இரண்டு பகுதிகளுக்கும் பதிலாக புதிய இரண்டு பகுதிகள் உருவாக்கப்படவுள்ளதோடு 31,000 இருக்கைகளை மேலதிகமாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் போது ரசிகர்களுக்குப் பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் குறிப்பாக சக்கர நாற்காலியில் வரும்




மாற்றுத்திறனாளிகளின் நலன் கருதி அதற்குத் தகுந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 50 மில்லியன் பவுண்ஸ்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. புனரமைக்கப்பட்ட லோட்ஸ் மைதானம் 2020ஆம் ஆண்டு பாவனைக்கு விடப்படும் என்றாலும் பூரணத்துவமான கட்டமைப்பு வேலைகள் 2021ஆம் ஆண்டே முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# ஆறு வாரம் ஓய்வு

கடந்த வாரம் மன்செஸ்ரர் யுனைற்றட் – ரொற்றின்காம் அணிகளுக்கிடையிலான போட்டியில் 1 : 0 என்று ரொற்றின்காம் தோல்வியடைந்ததை விட அணியின் நட்சத்திர வீரரான ஹரி கேன் காயமடைந்தமை ரசிகர்களுக்கு வேதனையை ஏற்படுத்தியுள்ளது. இடது கணுக்காலில் ஏற்பட்ட காயத்தினால் ஆறு வாரங்கள் ஓய்வெடுப்பது அவசியமென வலியுறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே ரொற்றின்காமில் விளையாடி வரும் தென்கொரிய வீரரான சன்கெயுங்மின் தற்போது நடைபெற்றுவரும் ஆசியக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக விலகியுள்ளார்.

இந்தப் பருவ கால பிறீமியர் லீக் தொடரில் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ரொற்றின் காம் சார்பில் அதிக கோல்கள் அடித்த இவ்விரு வீரர்களும் இல்லாதது பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அதிலும் புள்ளிப்பட்டியலில் லிவர்பூல், மன்செஸ்ரர் சிற்றி அணிகளுக்கு அடுத்த படியாக மூன்றாமிடத்தில் உள்ள ரொற்றின்காமுக்கு இது துரதிர்ஷ்டமே. ஆனாலும் முகாமையாளரான பொச்சற்றினோ 'ஹரி கேனின் காயம் அணிக்குப் பெரும் இழப்புத்தான் என்றாலும் அணியில் உள்ள ஏனைய வீரர்கள் தங்களை நிரூபித்துக் கொள்வதற்கான சிறந்த சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்' எனக் கூறியுள்ளார்.

# மீண்டும் ஆரம்பம்



இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) உதைபந்தாட்டத் தொடரின் 2018 /19 பருவகாலக் போட்டிகள் கடந்த செப்ரெம்பர் மாதம் ஆரம்பமானது. ஆனாலும் இந்தமாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆரம்பமான ஆசியக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் இந்திய அணியும் கலந்து கொள்ள இருந்த காரணத்தினால் ஐ.எஸ்.எல். போட்டிகள் கடந்த மாதம் 16 ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டி பெப்ரவரி முதலாம் திகதியே நடைபெறவுள்ளதனால் அதற்குப் பின்னரே ஐ.எஸ்.எல். போட்டிகள் மீண்டும் ஆரம்பிப்பதாக இருந்தது. ஆனாலும் இந்திய அணி முதற்சுற்றுப் போட்டியுடனேயே வெளியேறிய காரணத்தினால் நேற்றைய தினம் (25.01.2019) மீண்டும் ஐ.எஸ்.எல். போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. நேற்றைய போட்டியில் கேரளா பிளாஸ்ரர்ஸ் - அத்லெடிகோ கொல்கத்தா அணிகள் விளையாடியிருந்தன.

அந்தவகையில் இந்தத் தொடரின் லீக் சுற்றுப் போட்டிகள் வரையிலான போட்டி அட்டவணையை ஐ.எஸ்.எல். போட்டி நிர்வாகம் ஏற்கனவே வெளியிட்டுள்ளது. அதன்பிரகாரம் இறுதி லீக் சுற்றுப் போட்டி எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்ணீரைப் பின்தொடர்தல்

"எனக்கும் அழுகை வராமலில்லை ஆனாலும் உங்கள் முன்னால் அழக்கூடாது என்றொரு வைராக்கியம்" என்ற சாரப்பட எழுதிய ஒரு கவிதையை எப்போதோ படித்த ஞாபகம். தற்போது நடைபெற்றுவரும் அவுஸ்ரேலியன் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் வீராங்கனை ஒருவர் அழுத காட்சியைப் பார்த்த பொழுது இந்தக் கவிதையே நினைவுக்கு வந்தது. மகளிர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப்போட்டி ஒன்றில் அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்ரீபன்சும் குறோசியாவின் பெற்றா மற்றிக்கும் மோதியிருந்தார்கள்.

இதில் 7 : 6, 7 : 6 என்ற செற் கணக்கில் ஸ்ரீபன்ஸ் வென்றிருந்தார். போட்டியில் தோல்வியடைந்த 28 வயதான பெற்றா மற்றிக் ஆடுகளத்தில் அழக்கூடாது என்பதற்காக சற்றுத் தூரம் நடந்து கார்த் தரிப்பிடம் ஒன்றின் தரையில் இருந்து மனமுடைந்து அழுதுள்ளார். ஆனாலும் போட்டியை ஒளிபரப்பிய தொலைக்காட்சி நிறுவனம் அதனையும் படம் பிடித்ததை அவர் அறியவில்லை. ஆதலால் அந்தக் காட்சியையும் ரசிகர்கள் பார்வையிட்டுள்ளார்கள். வெற்றி, தோல்விக்கப்பால் இந்தக்காட்சி ஒட்டுமொத்த ரசிகர்களின் மனதையும் கலங்க வைத்துள்ளது. ஏற்கனவே செரீனா வில்லியம்ஸ் தன்னிடம் தோல்வியடைந்து அழுத பதினெட்டு வயது உக்ரைன் வீராங்கனை டயானாவுக்கு ஆறுதல் கூறிய வீடியோவும் வைரலாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 26.01.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.